www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை □ இதழ் 14 □ ஓகஸ்ட் - நவம்பர் 2003 □ ISSN 1474 - 8770 □ விலை £1.00, EUR 2.00

சிறுவர்களின் எழுத்தாற்றலைத் தூண்டும்


## சிறுவர் தேசம்

இலவச இணைப்பு

01 வரவேற்பறைகளில் குப்பை கொட்டாதீர்கள் — தமிழ் தொலைக்காட்சிகள்
03 அவைக் காற்றுக் கழகத்தின் மேடையேறாத காட்சி



04 சமாதான முயற்சியும் ஜனநாயக உரிமைகளும்
06 மத்தியில் பிடி வளர்ச்சிக்குத் தடை
08 முஸ்லீம்களின் அரசியல் நிலைப்பாடு
10 எப்படி அமைக்கலாம்: இடைக்கால நிர்வாக அரசு
14 தமிழர்களின் சமூக முன்னேற்றமும் ஊடகங்களும்
16 கவிதை அந்தக் கண்ணீர்த் துளிகள்
17 வரலாற்று ஆய்வு பௌத்தத்தை வளர்த்த தமிழர்கள்
21 உண்மைக் கதை வைரசு மனிதர்கள்
23 கவிதை — கனவுகளும்



## வேண்டாம் வன்முறை, நிறுத்துங்கள்!!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசத்தின் முயற்சிகள் வெற்றி அளித்தது



படம்:
வி சிவலிங்கம் (இடம்) Ms Judith Anne Preeceஇடம் Rising From The Ashes நூலைக் கையளிக்கிறார். கவுன்சிலர் போல் சத்தியநேசன் (வலம்)

3 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள புதிய நூல்கள் யாழ் நூலகம் நோக்கி செல்கிறது. தேசம் சஞ்சிகையின் ஆதரவில் இலண்டனில் உள்ள யாழ் நூலக நண்பர்கள் வட்டத்தினால் இந்நூல்கள் யாழ் நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ் நூலக சர்வதேச இணைப்பாளர் என் செல்வராஜா மேற்கொண்டார்.

கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகம் நூல்களை விஞ்ஞானரீதியில் பிரித்து ஒழுங்குபடுத்துவது மற்றும் பதிவு செய்வது தொடர்பான விதிகள் பற்றிய நூல்களின் (Dewey 21 Classification Scheme and AACR2 Cataloguing Rules) மும்மூன்று பிரதிகளை யாழ் நூலகத்திற்கு தேசம் சஞ்சிகையூடாக அன்பளிப்புச் செய்து உள்ளது. புதிய பதிப்பான இந்நூல்களின் விலை ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் ரூபாய் ஆகும்.

யூலை 31ல் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தின் Learning Resource Centrey இல், இடம்பெற்ற சிறிய சந்திப்பில் யாழ் நூலக நண்பர்கள் வட்ட பிரதிநிதிகளிடம் இந்நூல்கள் கையளிக்கப்பட்டன. யாழ் நூலக நண்பர்கள் வட்டப்பிரதிநிதிகள் கவுன்சிலர் போல் சத்தியநேசன், ஆய்வாளர் வி சிவலிங்கம், தேசம் ஆசிரியர் த ஜெயபாலன் ஆகியோர் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகப் பிரதிநிதி Ms Judith Anne Preece இடம் இருந்து இந்நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

Rising From The Ashes - Tragic Episode of The Jaffna Library என்ற யாழ் நூலகம் பற்றிய வரலாற்று ஆவணத்தின் 5 பிரதிகள் கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தின் தகவல் சேகரிப்புப் பிரிவிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நூல் கடந்த யூன் முதலாம் திகதி யாழ் நூலக எரிப்பின் 22வது ஆண்டு நினைவு நாளில் தேசம் சஞ்சிகையால் வெளியிடப்பட்டது. இதில் கலந்து கொண்ட கலாநிதி மேரி டேவிஸ், கிழக்கு இலண்டன் பல்கலைக்கழக Director of Learning; யாழ் நூலகத்திற்கு பல்கலைக்கழகம் உதவும் என்று உறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூல் அறிமுகம்

## ஈழத் தமிழர் எழுச்சி — ஒரு சமகால வரலாறு

இந்நூலை இலங்கை மலையகத்தின் மூத்த பத்திரிகையாளரான எஸ் எம் கார்மேகம் எழுதி உள்ளார். கால் நூற்றாண்டு காலம் வீரகேசரியில் பணியாற்றிய அனுபவங்களை வைத்துக் கொண்டு இந்நூலை அவர் தொகுத்து உள்ளார். இலங்கையின் புராதன வரலாற்றைப் பற்றிய குறிப்புகளுடன் ஆரம்பித்து 55 ஆண்டு கால சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களையும் இன, அரசியல் படுகொலைகளையும், மக்கள் எழுச்சிகளையும் நூலாசிரியர் பதிவு செய்து உள்ளார். கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஆசிரியர் அதனை ஈழப் புலிகளுடன் ஒரு வாரம் என்ற தனி அத்தியாயத்தில் எழுதி உள்ளார். இலங்கை இனப்பிரச்சினை பற்றி அண்மையில் வெளிவந்துள்ள இந்நூல், மிகவும் இலகு தமிழில் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இலங்கை — இந்திய உறவுகளுக்குப் பாலம் அமைத்து வீரகேசரியிலும் தினமணியிலும் பணிபுரிந்த இவரின் இந்நூல் இலங்கை வரலாற்றை முதற் தடவை படிக்க நினைப்பவர்களுக்கு மிகவும் உகந்தது.



ஈழத் தமிழர் எழுச்சி 19 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு 382 பக்கங்களுடன் வெளிக் கொணரப்பட்டு உள்ளது. படங்கள், புள்ளி விபரங்கள், காலக் குறிப்புகள் என்று மிகவும் நேர்த்தியாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் முதற் பதிப்பு சென்னையில் உள்ள கார்சன்ஸ் பதிப்பகத்தினால் ஏப்ரல் 2002ல் பதிப்பிக்கப்பட்டு உள்ளது.

www.tamilarangam.net



தேசம்

THESAM

Chief Editor
T Jeyabalan
0044 0 208 279 0354
jeyabalan.thesam@ntlworld.com

Administrative Editor
N Selvarajah
(Librarian)
0044 0 158 279 3786
selvan@ntlworld.com

Editorial Board

Technical Support
S Gauthaman

Type Setting
J Srirajani

THESAM
P O Box 35806
London, E11 3JX
United Kingdom

Tel / Fax :
0044 0 208 279 0354

thesam97@hotmail.com

# எமது வரவேற்பறைகளில் குப்பை கொட்டாதீர்கள்

இம்மாதம் முதல் ஐரோப்பாவில் ஒளிபரப்பாகும் தொலைக் காட்சிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகி 10 தொலைக்காட்சிகள் வரை இயங்க ஆரம்பித்து உள்ளன. ஆனாலும் எந்த தொலைக்காட்சியும் தங்களுக்கு என்று ஒரு தனித்துவ அடையாளத்தை கொண்டு இருக்கவில்லை என்பது தான் உண்மை.

கோடம்பாக்கத்தை மட்டுமே தளமாகக் கொண்டு சினிமாவையும் சீரியல்களையம் அது தொடர்பான நிகழ்ச்சிகளையும் தான் தமிழக தொலைக்காட்சிகள் தருகின்றன. 15 ஆண்டுகளுக்கு முன் கறுப்பு வெள்ளையில் வந்த ஒளியும் ஒலியும் தற்போது கலரில் வருகிறது, சிறந்த தொழில்நுட்பம் உள்ளது என்பதைவிட வேறு எதையும் அவை சாதித்து விடவில்லை.

புலம்பெயர் தொலைக்காட்சிகளும் தமது அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ளவில்லை. வானொலியில் இருந்து தொலைக் காட்சிக்கு முழுமையாக இவை இனனும் மாறவில்லை. இவர்கள் இப்போதைக்கு மாறும் வாய்ப்புகளும் குறைவாகவே உள்ளது. இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டு 50 வீதத்திற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சிகள் மூடப்படும் போது மீதமுள்ள தொலைக் காட்சிகள் தரமடைய வாய்ப்பு ஏற்படும் என்று நம்பலாம்.

தற்போது இந்தத் தொலைக்காட்சிகள் எல்லாம் எமது வரவேற்பு அறைகளில் குப்பை கொட்டுகின்றன. இதனால் பார்வையாளர்களின் சிந்தனைத் திறன் மழுங்கடிக்கப்படுகிறது. தமிழ் தொலைக்காட்சிகளின் வரவால் அவர்கள் ஓரளவு பார்த்து வந்த பிரதான ஐரோப்பிய மொழித் தொலைக்காட்சிகள் கைவிடப்பட்டு உள்ளது. இது எல்லா வயதினரது சிந்தனைத் திறனையும் பாதிக்கும்.

இந்த ஆரோக்கியமற்ற நிலை ஆரோக்கிய மற்ற போட்டியால் தான் ஏற்பட்டு உள்ளது. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். அதற்காக தெரு முழுக்க கீரைக்கடை திறந்தால் வியாபாரம் நடத்த முடியாது போகும். அது தான் தமிழ் தொலைக்காட்சிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை.

இன்று வளர வேண்டியது நிகழ்ச்சிகளை தயாரிக்கும் நிறுவனங்கள். அவர்கள் தரமான நிகழ்ச்சிகளை பல்வேறு கோணங்களிலும் தயாரித்து வழங்கும் போது தொலைக்காட்சிகள் தரமடையும். வர்த்தக ரீதியிலும் அவர்கள் வெற்றி கொள்ள முடியும். நிகழ்ச்சிகள் இன்றி 24 மணிநேரத் தொலைக் காட்சிகளை ஆரம்பித்து குப்பை கொட்டாதீர்கள்.

நாம் சிறந்த பண்பாட்டையும், நீண்ட வரலாற்றையும், பல்வேறு பிரச்சினைகளையும் கொண்ட சர்வதேச அளவில் பரந்து வாழுகின்ற ஒரு உறுதியான சமூகம். வெறுமனே கோடம்பாக்கத்தை காட்டி எங்களை மழுங்கடிப்பதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. தமிழ் தொலைக்காட்சிகளே தொலைந்து போங்கள் என்று தமிழர்கள் சபிக்கும் முன்னர், குப்பைகொட்டுவதை நிறுத்தி தரமான நிகழ்ச்சிகளைத் தாருங்கள். தருபவர்களை தமிழர்கள் வரவேற்பார்கள்.

**உங்கள் பெயர், முகவரியுடன் 10 பவுண் செலுத்தி நீங்களும் தேசத்தின் சந்தாதாரர் ஆகுங்கள். சந்தா பெற்றவர்கள் அதனைத் தவறாமல் புதப்பித்துக் கொள்ளவும். நன்றி.**

www.tamilarangam.net



# வேண்டாம், நிறுத்துங்கள்!!!



த ஜெயபாலன்

ஓகஸ்ட் 30ல் இலண்டனில் மீண்டும் ஒரு தமிழ் இளைஞர் (ரட்ணசேகரம் - 18) கோரமாகக் கொல்லப்பட்டார். 2000ம் ஆண்டின் பின் இங்கு கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை 10 வரை உயர்ந்துள்ளது. இத்தனை கொலைகளும் தமிழ் இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட பழிவாங்கல் தாக்குதல்களின் விளைவே. கொல்லப்பட்டவர்களும் கொலை செய்தவர்களும் 18 - 25 வயதிற்கு இடைப்பட்டவர்களே.

இந்த பழிவாங்கல் தாக்குதல்களுக்கு பெரிய காரணங்கள் எதுவும் இருப்பதாக பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கவில்லை. ஸ்கொட்லண்ட் யாட் அதிகாரிகளே இந்தக் கொலைகள் மிகவும் கோரத்தனம் மிக்கவை என விபரிக்கிறார்கள். கொலையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை மடம்துசா கண்காட்சியகத்தில் தான் பொதுவாக இந்த ஆங்கிலேய சமூகம் காண்கிறது. கோடரி, வாள், கத்தி, சுத்தியல், பொல்லுக்கட்டை இது தான் இந்த இளைஞர்களின் ஆயுதம்.

இவ்வாறான வன்முறைகளை நாம் கண்டு கொள்ளாமல் எமக்கு என்ன என்று இருப்பது மிகவும் சுலபமானது. அதைத்தான் எமது விடுதலைப் போராட்டங்களும் எமக்கு கற்றுத் தந்திருக்கின்றன. ஆனால் தாக்குதல்களில் அப்பாவிகள் சிலரும் கொல்லப் பட்டுள்ளனர். பலர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த வன்முறை தமிழ் சமூகத்தில் இடம் பெறுவதால் தமிழ் சமூகத்தின் மீது அழுத்தங்கள் உள்ளது. தமிழ் சமூகம் பாராமுகமாக இருந்தால் முழு சமூகமும் வன்முறையாளராகக் காட்டப்படும் அபாயமும் உண்டு. எமது பிள்ளைகளும் இந்த வன்முறைக் கலாச்சாரத்திற்கு இழுக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதம் யாருக்கும் இல்லை.

அட்டைப் படத்தில் உள்ள திரு திருமதி தங்கவடிவேல் தம்பதிகள் மட்டக்களப்பைச் சேர்ந்த சராசரி தமிழ் குடும்பம். இவர்களது குடும்பம் வன்முறையில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இவர்கள் தங்கள் மூத்த மகன் திலீபனை பல எதிர்பார்ப்புகளுடன் சில ஆண்டுகளுக்கு முன் இலண்டனுக்கு அனுப்பினர். திலீபனும் பாசமுள்ள, துடிப்புள்ள, பொறுப்புள்ள இளைஞனாக குடும்பப் பொறுப்புடன் இங்கு வந்ததை தங்கவடிவேல் விபரிக்க தாயார் கண்ணீர் ததும்ப தலையசைத்து ஒப்பினார்.

ஆனால் இவ்வாண்டு மார்ச் 19 காலை இளைஞர் குழுக்களின் பழிவாங்கல் தாக்குதலில் திலீபன் வெட்டப்பட்டு சுடப்பட்டு மரணமடைந்தான். இந்தப் பெற்றோர் செய்த பாவம் என்ன? தமது மகன் இலண்டன் சென்று நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதைத் தவிர அவர்கள் எதையும் எண்ணவில்லை. இதைத்தானே பல இலட்சம் ஈழத்தமிழ் பெற்றோர்கள் செய்தனர். ஆனால் தங்கவடிவேல் குடும்பத்தினரது வாழ்க்கையே தலை கீழாகி விட்டது. 23 வயதில் தங்கள் மகனை பலிகொடுத்த இந்தப் பெற்றோர், குழு வன்முறையில் தங்கள் மகன் கொல்லப்பட்டதால் இன்னும் மனமுடைந்து உள்ளனர்.

பொலிசாரைப் பொறுத்தவரை அவர்கள் அனைத்துக் குற்றவாளிகளையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தி உள்ளனர். ஆனால் இன்னுமொரு கொலை இடம்பெறுவதை தடுப்பதற்கான நடவடிக்கை மந்தமாகவே உள்ளது.

ஆனால் வருமுன் தடுக்கும் நடவடிக்கையில் தமிழ் சமூகத்திற்கு முக்கிய பொறுப்பு உண்டு. முதலாவது கொலை இடம்பெற்றதும் தமிழ் பொது அமைப்புகளும் ஆலயத் தலைமைகளும் தலையிட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் திலீபனும், ரட்ணசேகரமும் இன்றும் உயிருடன் இருந்து இருப்பார்கள்.

தமிழர்களுக்கு உதவ பிரித்தானிய அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும், தமிழ் மக்களும் பல மில்லியன் பவுண்களை தமிழ் அகதி அமைப்புகளிற்கு, கல்வி நிறுவனங்களுக்கு, ஆலயங்களுக்கு வழங்குகின்றனர். ஆனால் தமிழ் சமூகத்தின் ஒரு அங்கமான இந்த இளைஞர்கள் விடயத்தில் யாரும் அக்கறை காட்டவில்லை. இவ்வமைப்புகள் சமூகப் பொறுப்புடன் செயற்பட முன்வரவேண்டும். □□□□□


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ் அவைக் காற்றுக் கழகத்தின் நீண்ட காலக் கலைஞர் (1979 முதல்) கிருஷ்ணராஜா அந்நாடகக் குழுவின் அண்மைக்கால நாடகங்களில் காணாமல் போயுள்ளார். இவ்வாண்டு பெப்ரவரி 8ல் வோல்தம்ஸ்ரோ லொய்ட்ஸ் பார்க் அரங்கில் இடம்பெற்ற வெள்ளி விழா மேடையேற்றமே அவர் அவைக் காற்றுக்கழகத்தின் மேடையில் தோன்றிய கடைசி நிகழ்வாகும். அந்தக் 'காத்திருப்பு'க்குப் பின் அவர் தொடர்ந்தும் காத்திருக்கிறார். அது பற்றி அவர் தேசத்துடன் மனம் விட்டுப் பேசுகிறார்.**

## அவைக் காற்றுக் கழகத்தின்
# மேடையேறாத காட்சி

வழமையாக நான் தான் மலர்கள், பிரசுரங்கள் வடிவமைக்கிறனான். ஆனால் இந்தத் தடவை அதனை வெளியே கொடுத்து வடிவமைத்தனர். அதன் காரணத்தை புத்தகத்தில் இருந்து தெரிந்து கொண்டேன். அதில் வழமைக்கு மாறாக கலைஞர்கள் பற்றிய சுயகுறிப்புகள் சேர்க்கப்பட்டு இருந்தது. ஆனால் எனது சுய குறிப்பை என்னிடம் காட்டவில்லை. இதில் பாலேந்திரா, ஆனந்தராணி தங்களை சுயவிளம்பரப் படுத்தியதாகவே நான் கருதுகிறேன். எங்களைப் பற்றி நாங்களே எழுதுவது எடுபடாது.

அம்மலரில் "க பாலேந்திரா தமிழ் அவைக்காற்றுக் கழக ஸ்தாபகர்." என்று எழுதப்பட்டு உள்ளது. பாலேந்திரா ஸ்தாபகர்களில் ஒருவர். அவைக் காற்றுக்கழகம் தனி ஒருவரால் ஸதாபிக்கப்படவில்லை. ஒரு குழுவாகத்தான் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு ஏ ஜெ கனகரட்னா தலைவராகவும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆனந்த நடராஜா செயலாளராக இருந்தார். நித்தியானந்தன், மௌனகுரு, நிர்மலா ஆகியோர் அவைக் காற்றுக்கழகத்தை 1978ல் ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்தனர்.

பெப்ரவரி 16 கூட்டத்தில் நான் சில கேள்விகளை எழுப்பினேன். மேலும் பாலேந்திரா தவிர ஏனையவர்களும் நாடகங்களுக்கு நெறியாள்கை செய்ய வேண்டும் என்றெல்லாம் பேசப்பட்டது. அவைக் காற்றுக் கழகம் தொடர்பான விபரண நூல் ஒன்றை அஞ்சல் மாலி, பத்மநாபஐயர், மு நித்தியானந்தன் ஆகியோரைக் கொண்டு தொகுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் பாலேந்திரா அதனை கைவிடுமாறு கேட்டார். ஆனால் நான் மறுக்கவே "நீர் என்னை ஓவறைட் பண்ணப்பார்க்கிறீரோ" என்று பாலா கேட்டார். என்னிடம் பாலா அப்படி நடந்து கொண்டது அதுவே முதற்தடவை. அதுவே கடைசியாக நான் பாலாவுடன் கதைத்தது. இவற்றைத் தொடர்ந்து நான் ஓரங்கட்டப்பட்டேன்.

அதன் பின் ஜேர்மன், மானிப்பாய் இந்துக் கல்லூரி(பழைய மாணவர் சங்கம்), கம்பர் மலை (ப.மா.ச) என ஏற்பாடு செய்யப்பட்ட நாடகங்கள் பற்றி எனக்கு அறிவிக்கப்படவில்லை. இது விடயமாக பாலேந்திராவிற்கு பல தடவைகள் தொலைபேசியில் தகவல் தெரிவித்தேன். அவர் தொடர்பு கொள்ள வில்லை. ஒரு கூட்டத்தை கூட்டும்படியும் கேட்டேன் ஆனால் இதுவரை கூட்டம் கூட்டப்படவில்லை. அவைக்காற்றுக் கழகம் ஒரு பொது அமைப்பு என்றே நான் அதற்காக உழைத்தேன். ஆனால் அது பாலேந்திரா, ஆனந்தராணியின் தனிப்பட்ட அமைப்புப் போலவே நான் நடத்தப்பட்டேன்.

அவைக் காற்றுக் கழகத்தின் 25 வருட கால அனுபவத்தில் சிலருக்கு பிரச்சினைகள் வந்ததை உணர்ந்திருக்கிறேன். அப்போது வெளியேறிய நிர்மலா போன்றவர்களுக்கு குரல் கொடுக்காதது என்னுடைய தவறு. இப்போது அனுபவிக்கிறேன். அவைக் காற்றுக் கழகம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று எழுதிய மு நித்தியானந்தனும் இப்போது இல்லை. அப்போது ரங்கன், ராஜ்குமார், திவாகரன் ஆகியோரும் அவைக் காற்றுக் கழகத்தில் நடித்தனர். அவர்களும் இப்போது இல்லை.

ஒரு குழு உணர்வுடன் செயற்படாமல் ஒரு சிலர் தங்களின் சுயலாபத்திற்காக செயற்படுகிறார்கள் என்று தெரியவரும் போது அவர்களின் வளர்ச்சிக்காக நாங்கள் தொண்டு செய்ததாகவே எண்ணத் தோன்றுகிறது. நான் கைவிட்டுவிட்டேன். நானாகவே வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளேன். நான் இப்போது ஒரு சுதந்திரமான கலைஞன். ஆனால் போட்டி நாடகக் குழு ஆரம்பிக்கமாட்டேன். ஆனால் எனது நடிப்பிற்கு இது முற்றுப் புள்ளியாக நிச்சயம் இருக்காது. ஆனால் இந்த நிலை ஏற்பட்டதை நினைக்கும் போது நான் சரியாக கவலைப்படுகிறேன் மிகவும் மன உளைச்சல்படுகிறேன்.□□□□□

www.tamilarangam.net



**பன்முகத் தன்மை கொண்ட ஜனநாயகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் 'சமாதான முயற்சியும் ஜனநாயக உரிமைகளும்' என்ற கருத்தரங்கு யூன் 28, 29ல் ஜனநாயக ஒன்றியம் ஏற்பாட்டில் தெற்கு றைசிலிப்பில் இடம்பெற்றது. 'சிறுபான்மையினரின் உரிமைகளும் சமஸ்டித் தத்துவமும்' என்ற தலைப்பில் முதல்நாள் காலை அமர்வு இடம்பெற்றது. இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஸ்டி ஒரு தீர்வா? - சுசீந்திரன்: சமஸ்டி - பெல்ஜிய அனுபவம் கிரிஸ்ரினா கமகே: சமஸ்டி அமைப்பில் மலையகத் தமிழர்களின் உரிமைகள் - பி ஏ காதர்: சமஸ்டி அமைப்பில் முஸ்லீம்களின் உரிமைகள் - எம் என் எம் பசீர்: மாலை அமர்வு 'முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகமும் சமாதானமும்' என்ற தலைப்பில் இடம்பெற்றது. தற்போதைய நிலைமைகள் பற்றிய ஆய்வு - இராஜநாயகம்: இடைக்கால நிர்வாகம் - உபாலி குரே: பொருளாதாரமும் சமூக நீதியும் - அகிலன்: மறுநாள் காலை அமர்வு 'மாற்று ஊடகமும் இலக்கியமும்' என்ற தலைப்பில் இடம்பெற்றது. ஊடகங்கள் - வி சிவலிங்கம்: மாற்று ஊடகங்கள் - சபேசன் ஆகிய விடயங்களில் ஆய்வும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. இக்கருத்தரங்கின் முடிவில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதிநாள் மாலை In the shadow of the gun, Twisted Things ஆகிய இரு நாடகங்கள் இடம்பெற்றது.**

# சமாதான முயற்சியும் ஜனநாயக உரிமைகளும்

## கருத்துச் சிதறல்கள்

உலகில் 40 வீதமான 2 பில்லியன் மக்கள், 24 சமஸ்டி அரசுகளில் வாழ்கிறார்கள். ஒற்றை ஆட்சிக்கும் கூட்டாட்சிக்கும் இடைப்பட்ட அமைப்பு சமஸ்டி. மக்களிடம் இருந்து தான் இதற்கான அபிலாசைகள் வர வேண்டும். சமஸ்டி முறையில் சிந்திக்கும் பண்பு வர வேண்டும். - சுசீந்திரன்

வர்க்கப் பிரச்சினைகள் சமஸ்டியில் எப்படித் தீர்க்கப்படும்? - பாண்டியன். உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வு எதுவும் இதற்கு இல்லை. எப்படி அதிகாரங்களைப் பகிர்வது என்ற அரசியல் யாப்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தான் சமஸ்டி அமைப்பு ஒரு தீர்வாக அமையும். - இராஜநாயகம்

பிரச்சினைகளை இலகுவாக மறந்து போகும் சமூகமாக உள்ளோம். தனிநாடு கேட்டோம் அதற்கு என்ன நடந்தது? இந்த சமஸ்டி கோசங்கள் புறத்தில் இருந்து திணிக்கப்படுகின்றன. முதலாளித்துவ நாடுகள், சந்தையைத் திறக்க சமஸ்டி பேசுகின்றனவா? உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி பேச முடிந்தால் உள்ளக சமஸ்டி பற்றியும் பேசலாம். 6 இயக்கங்கள் தொடங்கியது எதற்கு. வர்க்கப் பிரச்சினை எப்போது இல்லாமல் போவது.- சிறி. அது தமிழ் இடதுசாரிகளின் கனவு. - நிர்மலா

15 வீத மக்கள் தொகையுடன் 2வது இனமாக இருந்த மலையக மக்கள் இன்று 7 வீத மக்கள் தொகையே உடைய 4வது இனமாக்கப்பட்டு உள்ளனர். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம், குடும்பக்கட்டுப்பாடு, திட்டமிட்ட குடியேற்றம் ஆகியவை இதற்கு முக்கிய காரணம். இடதுசாரிகள் வர்க்க அடிப்படையில் சம்பள உயர்வுக்காக மட்டுமே போராடினர். அவர்களின் இன உரிமைக்காகப் போராடவில்லை. - பி எ காதர்

இனப்போராட்டம் முன்னிலைக்கு வந்ததால் வர்க்கப்போராட்டம் தேங்கிவிட்டது. - பாலசுரியன்

இடதுசாரிகள் இனப்பிரச்சினையை கைவிட்டதால் தொண்டைமான் வளரக் கூடியதாக இருந்தது. தமிழன் என்பதற்குப் பின் தான் அவன் பாட்டாளி. வர்க்கப் பிரச்சினைக்கு சோசலிஸம் தான் தீர்வு. ஆனால் சோசலிசம் ஜனநாயக முறையினூடாகவே செல்ல வேண்டும். - பி எ காதர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முஸ்லீம்கள் தனித்துவமான இனமாகக் கொள்ளப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்று புலிகள் குறிப்பிடுவது முஸ்லீம்களின் அரசியல் அபிலாசையை நிராகரிக்கிறது. இப்போதும் முஸ்லீம்கள் பய உணர்வுடன் தான் வாழ்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பிற்கும் சமூக நீதிக்கும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். செல்வநாயகம் முஸ்லீம்களின் உரிமை களை ஏற்றுக் கொண்டார். இன்று முஸ்லீம்கள் அரசியல் ரீதியில் தனித்துவமான சக்தியாக மிளிர்கின்றனர். முஸ்லீம்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். - பசீர்

ரவுப் ஹக்கீம் முஸ்லீம் தீர்வு தொடர்பாக எந்த அறிவும் இல்லாமல் உள்ளார். முஸ்லீம் தலைமைத்துவங்கள் முஸ்லீம்களை வீழ்த்தி விட்டன. 1984-7ல் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் வித்தியாசமாக நடந்து கொண்டார்கள். முஸ்லீம்கள் வித்தியாசமாக சிந்தித்தார்கள். - இராஜநாயகம்

பிரச்சினையின் மூலம் அங்கிகரிக்கப்படவில்லை. அரசியல் யாப்பு மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாகாது. ஆயினும் எந்த அரசியல் ஏற்பாடும் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 50 வீதத்தை வழங்க வேண்டும்.

புலிகள் தனி அரசு கோருவதால் இந்தியா புலிகளை விரும்பாது. அனால் அமெரிக்காவிடம் புலிகள் பற்றிய ஒரு மென்போக்கு ஒரு மூலையில் இருக்கலாம். - பாலசுரியன்

புலிகள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை ஒரு போதும் எழுத்தில் வழங்குவதில்லை. அவர்கள் அரசாங்கத்தின் மீது பொறுப்பை சுமத்திவிடுகிறார்கள். தமிழர்களையும் புலிகளையும் பிரிக்க முடியாது என்று புலிகள் நம்புகின்றனர். சில வேளைகளில் ஈழம் உருவாவதை அமெரிக்கா விரும்பலாம். - இராஜநாயகம்

தனியாகப் பிரிந்து போக முடியாது என்று செல்வநாயகம் சொன்னார். ஆனால் 1985ல் தனி நாடு நடைமுறைச் சாத்தியம் என உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது மீண்டும் சமஸ்டி அமைப்பு நோக்கி நகர்கிறது. - இராஜநாயகம்.

எப்போதும் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாகத் தான் கேட்பார்கள். - பாண்டியன்

2000ம் ஆண்டு சமஸ்டி அமைப்பு கொண்டுவரப்பட்டு நீலன் திருச்செல்வம் சுடப்பட்ட பின் மீண்டும் சமஸ்டி பற்றி கதைக்கின்றார்கள். - பாலசுரியன்.

பொருளாதாரமும் சமூகநீதியும் பற்றிப் பேசுவது அரசியல் வேலை தான். வடக்கு கிழக்கு அபிவிருத்தி இலங்கை அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டது என்பது மறுப்பதற்கில்லை. வடக்கு கிழக்கு புனர்நிர்மாணத்திற்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட உள்ளது. ஆனால் புலிகளிடம் புனர்நிர்மாணத்திற்கான திட்டங்கள் இல்லை. இருந்தும் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் புனர்நிர்மாண ஒப்பந்தங்களைக் கையேற்றனர். நிதியை பொறுத்த வரை அவர்கள் மபியா அமைப்பாகவே செயற்படுகின்றனர்.- அகிலன்

யாழ்ப்பாணத்தில் உருவான மிகவும் மோசடியான அரசியல்வாதி மகேஸ்வரன் (மண்ணெண்ணை மகேஸ்வரன்). இந்து கலாச்சார அமைச்சர். இவர் புலிகளுடனும் ரணிலுடனும் நெருக்கமானவர். - இராஜநாயகம்

பத்திரிகையாளர்கள் தங்கள் அடையாளங்களைக் காட்டிக் கொள்ளாமல் புனைப் பெயர்களில் எழுதுகிறார்கள். அரசாங்கத்தை தீவிரமாக விமர்சிக்கும் இவர்கள் புலிகளை விமர்சிப்பதில்லை. தினக்குரல் மட்டக்களப்பு காரியாலயம் தாக்கப்பட்டதை பத்திரிகைகள் தட்டிக் கேட்கவில்லை. - சிவலிங்கம்

குமார் பொன்னம்பலம் உட்பட தமிழ் அரசியல் வாதிகள் இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு, சிங்கள அரசியல் தலைவர்களுடன் சுமுகமான உறவைப் பேணினார்கள். - சிவலிங்கம்

ஆயுதப் போராட்டம் தமிழ் ஊடகங்களை பாதித்தது. அரசாங்கமும் ஆயுதக் குழுக்களும் ஊடகங்களை பயமுறுத்தின. பின் இயக்கங்களும் தங்களுக்கென பத்திரிகை சஞ்சிகைகளை ஆரம்பித்தன. 1986ல் புலிகள் ஏனைய இயக்கங்களை ஆரம்பித்த பின் இது வேறுவடிவம் எடுத்தது. இளைஞர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறி சிறுசஞ்சிகைகள் பத்திரிகைகளை ஆரம்பித்தனர். கருத்துக்கள் சுதந்திரமாக விவாதிக்கப்பட்டன. - சபேசன்

ஊடகங்களுக்கு இடையே புரிந்துணர்வு இல்லை குழுவாதம் தொடர்கிறது. - சோதிலிங்கம்

சிறுசஞ்சிகைகள் தான் தெளிவாகவும் காத்திரமாகவும் கருத்துக்களை முன் வைக்கின்றன. பெரும்பாலும் இவை இலக்கியம் சார்ந்தவையாக இருந்தாலும் ஆழமான அரசியல் தாக்கங்களை வெளிப்படுத்துகின்றன.- சிவலிங்கம்

தொகுப்பு — த ஜெயபாலன்

www.tamilarangam.net



1. வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு 600 வெளிக்கள மருத்துவப் பணியாளர்களுக்கான வெற்றிடம் உள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கத்தினால் பயிற்றப்பட்டவர்கள் பெரும்பாலும் சிங்களவர்கள் அல்லது சில தெற்கில் வாழும் தமிழர்களே. ஏன்?

2. அரச ஊழியர்களின் வேதனத்திற்குப் பொறுப்பான அரச திறைசேரி வடக்கு கிழக்கில் 600 வெற்றிடங்கள் இருந்தும் 200 பேருக்கு மட்டுமே ஊதியம் வழங்கக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கிறது. ஏன்?

3. இந்த வருடம் (2003) ஒகஸ்ட் மாதத்தில் மருத்துவத் தாதி ஆசிரியர்களுக்கான பயிற்சி முடிந்து 96 ஆசிரியர்கள் வெளியேறுகிறார்கள். அதில் ஒருவருக்குக் கூட தமிழ் தெரியாது. ஏன்?

# மத்தியில் பிடி வளர்ச்சிக்குத் தடை
# வடக்கு கிழக்கு சுகாதாரம் ஒரு உதாரணம்



**Dr N சிவராஜா**
விரிவுரையாளர்,
சமூக மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்.
ஆலோசகர்,
உலக சுகாதார ஸ்தாபனம்
யாழ்ப்பாணம்

**மருத்துவப் பணியாளர்களுக்கான பயிற்சிகளை மத்திய அரசாங்கமே மேற்கொள்ள முடியும். மாநில நிர்வாகத்திற்கு பயிற்சி அளிக்கும் அதிகாரம் இல்லை. மாவட்டத்திற்கு அல்லது மாகாணத்திற்கு இத்தனை மருத்துவ பணியாளர்கள் தேவை என்று நிர்ணயிக்க முடியும். ஆனால் இலங்கை மருத்துவத் துறை உட்பட்ட பல நிர்வாகக் கட்டமைப்புகளின் படி யாருக்குப் பயிற்சி அளிப்பது என்பதை மத்திய அரசாங்கமே முடிவு செய்யும்.**

**இந்த ஒரு அதிகாரத்தை மத்திய அரசாங்கம் வைத்திருப்பதால் வடக்கு கிழக்கின் மொத்த சுகாதார சேவையும் சீரழியும் நிலையில் உள்ளது. அரசாங்கம் சிங்களவர்களுக்கும் கொழும்பில் உள்ள மிகச் சில தமிழர்களுக்கும் மட்டுமே பயிற்சி அளிப்பதால் வடக்கு கிழக்கில் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன.**

**வடக்கு கிழக்கிற்கு மருத்துவப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தகுதி இருந்தும் வடக்கு கிழக்கில் உள்ளவர்களுக்கு பயிற்சி வழங்க இந்த அதிகாரத்துவ கட்டமைப்பு தடையாக உள்ளது. இது ஒரு அரசியல் விடயமாக இருப்பதால் இதில் உலக சுகாதார அமைப்பு போன்ற அரச சார்பற்ற சர்வதேச அமைப்புகள் தலையிட முடியாது.**

**இந்தப் பயிற்சிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தேவையான நிதியை வழங்குவதற்குத் தயாராக உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி அரசாங்கத்துடன் இணைந்து தான் நெக்கோட் என்ற வேலைத் திட்டத்தை நடத்துகிறது. அதற்கான நிதி 2002 ஜனவரியில் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த ஒன்றரை வருடத்தில் ஒரு மருத்துவப் பணியாளருக்குக் கூடப் பயிற்சி அளிக்கப்படவில்லை.**

**தற்போது அரசாங்கத்துக்கு இது பற்றிய ஒரு புரிந்துணர்வு உண்டு. ஆனால் இதைச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை அதிகாரிகளிடம் இல்லை. அந்த மனப்பான்மை இல்லாமல் எதனையும் செய்யமுடியாது. அதற்கு வெளியில் இருந்து அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் வழங்கப்பட வேண்டும். சர்வதேச அமைப்புகளோ, ஊடகங்களோ தான் அந்த அழுத்தங்களை வழங்க முடியும்.**

**தற்போதைய பேச்சு வார்த்தையில் அபிவிருத்தி புனர்வாழ்வு தொடர்பான விடயங்கள் முக்கியமாக இடம்பெற வேண்டும். மருத்துவப் பயிற்சிகள் மட்டுமல்ல பல்கலைக்கழகங்களுக்கான பயிற்சிகளின் தெரிவு உட்பட சகல பயிற்சிகளும்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளூர் பகுதிகளிலேயே மேற்கொள்ளக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பு அவசியம். பயிற்சிகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் சென்றால் அதனை வைத்துக் கொண்டு அவர்கள் எல்லா வற்றையும் கட்டுப்படுத்துவார்கள். அது தான் தற்போது நடக்கிறது.

வட கிழக்கு மாகாணத்தில் இருந்து தான் எங்களுக்குத் தேவையானவர்களைத் தெரிந்தெடுத்து அங்கேயே பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்வாக முடிபு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பல்கலைக் கழகங்களின் அனுமதியை 30 ஆண்டுகளுக்கு முன்னர் எப்படிக் கட்டுப்படுத்தினார்களோ அதே போன்று எல்லா வீடயங்களிலும் கட்டுப்பாடுகள் இன்றும் விதிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மருத்துவத் தாதிகள் பயிற்சிப்பள்ளி ஒன்று உள்ளது. மருத்துவத் தாதிகளைப் பயிற்றுவதற்கான ஆசிரியர்கள் அல்லது பயிற்சியாளர்களுக்கான இடங்கள் வெற்றிடங்களாக இருக்கின்றன. தற்போது சேவையிலிருக்கும் சிலரும் விரைவில் ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் உள்ளனர்.

இவ்வருடம் ஒகஸ்ட் மாதத்தில் மருத்துவத் தாதி ஆசிரியர்களுக்கான பயிற்சி முடிந்து 96 ஆசிரியர்கள் வெளியேறுகிறார்கள். அதில் ஒருவருக்குக் கூட தமிழ் தெரியாது. ஆறு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பயிற்சிகள் அடுத்த ஆறு வருடங்களுக்கு இடம் பெறமாட்டாது.

இவற்றின் விளைவாக இன்னும் சில வருடங்களில் பயிற்சியாளர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதை எவரும் எளிதில் எதிர்வு கூறிவிட முடியும். இதன் பாதிப்பு பாரதூரமானதாக இருக்கப் போகின்றது. நாளையே ஒரு சமாதான உடன்பாடு கைச்சாத்திடப்பட்டாலும் இந்த சுகாதார சீரழிவிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா இல்லையா என்ற கேள்விக்கான பதில் அந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தே இருக்கும்.

அந்தந்த மாநிலமே அதாவது வட கிழக்கு மாநிலமே தமது நடைமுறைத் தேவைகளை தீர்மானிக்கக் கூடியதான ஒரு அமைப்பு முறை ஒப்பந்தத்தில் இருக்குமானால் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கும் என்று நான் கருதவில்லை. பயிற்சிகள் மேற்கொள்ள ஒரு சில ஆண்டுகள் எடுக்கலாம். ஆனால் அதற்கு முன்னோடியாக அமையும் பெரும்பாலான வேலைகளை உடனே தொடங்கலாம்.

பயிற்சிகளில் உள்ள அடுத்த பிரச்சினை என்னவென்றால் குடும்பநல சேவையாளர்களுக்கான பயிற்சிக்கான அடிப்படைத் தகைமையை இலங்கை அரசாங்கம் சாதாரண தரத்தில் இருந்து உயர்தரதரத்தில் - குறிப்பாக, விஞ்ஞான பாடங்கள் சித்தியடைந்து இருக்க வேண்டும் என்று உயர்த்தி உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து இது நடைமுறைக்கு வந்துள்ளது.

கடந்த 10 வருட யுத்தத்தால் வடகிழக்கில் பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் பயன்படுத்துவதற்கான இரசாயனங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண வசதிகள் இல்லாமல் போனதால் வடகிழக்கின் புறநகர்ப் பகுதிகளில் இருந்த பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர்கள் விஞ்ஞான பாடங்களை கற்பிப்பதையே நிறுத்திவிட்டார்கள். மேலும் ஆசிரியர்கள் பலரும் புலம்பெயர்ந்து வெளியேறிவிட்டார்கள்.

இப்போதுள்ள தகைமை அடிப்படையில் பார்த்தால் யாழ் நகருக்கு வெளியே உள்ள யாரும் மருத்துவத் தாதிகளாவதற்கு விண்ணப்பிக்க முடியாத சூழ்நிலையைத்தான் காணமுடிகின்றது.

30 வருடங்களுக்கு முன் இலங்கை அரசில் பதியுதீன் மொகமட் என்ற முஸ்லீம் கல்வி அமைச்சர் இருந்தார். அவர் தன் சேவைக்காலத்தில், தகுதி இருந்ததோ இல்லையோ முஸ்லீம்களையே முஸ்லீம் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகவும் அதிபராகவும் நியமித்தார். சாதாரண தரத்தில் சித்தி அடையாத வரும் அக்காலகட்டத்தில் முஸ்லிம் என்ற காரணத்தால் ஆசிரியரானார்கள். இலங்கை முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்கும், நிர்வாக சேவைகளில் அவர்களின் பரம்பலுக்கும் அன்றைய கல்வி அமைச்சர் பதியூதீன் மொஹமட் வழங்கிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இன்று எத்தனை முஸ்லிம் விரிவுரையாளர்கள், விஞ்ஞானிகள், நிர்வாகிகள் என்று எங்கள் மத்தியில் உள்ளனர்.

அப்படிப் பார்த்தால் மருத்துவத் தாதிகள் பணிக்கு உயர்தர விஞ்ஞான பாடம் தேவை என்று கட்டாயமல்ல. அப்பணிக்கு தேவையான மனித வளம் அங்கு இருக்கின்றதா என்பதே முக்கியம். இன்னும் 10 ஆண்டுகளின் பின் பலர் உயர்தர பாடத் தகுதிகளுடன் இருந்தால் நாங்கள் அனுமதிக்கான தகமையை அப்போது உயர்த்தலாம்.□□□□□□□□

வடக்கு கிழக்கில் நீண்டகாலம் கடமையாற்றி பல ஆய்வுகளையும் மேற்கொண்டு வரும் Dr சிவராஜா அவர்களின் வடக்கு கிழக்கு மருத்துவ நிலை பற்றிய கட்டுரைகள் அடுத்தடுத்த இதழ்களிலும் வெளிவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லீம்களின் அரசியல் நிலைப்பாடு

# எமது வழி இஸ்லாம், எமது மொழி தமிழ்.



பேராசிரியர்
ஜலால்தீன்

இலங்கைக்கு வந்த அரபிகள் பற்றி பிரபல வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்:

1. அரபிகளின் இலங்கை வருகையால், இலங்கை - சீன வர்த்தகத் தொடர்புகள் அதிகரித்துச் சென்றன. குறிப்பாக பத்தாம் நூற்றாண்டில் மிக உச்ச நிலையில் இது இருந்தது.
(Pearson, "Coastal Western India", p.8)

2. 12ம் நூற்றாண்டில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை மன்னனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 16பேர் கொண்டு அமைக்கப்பட்ட சபையில் 4 முஸ்லீம்களும், 4 யூதர்களும், 4 பௌத்தர்களும், 4 கிறிஸ்தவர்களும் அடங்கியிருந்தனர்.
(B.J.Perera. "The Foreign trade and commmerce of ancient Ceylon" III, Ceylon Historical Journal, (Ch.1), Vol.1, No.4, 1954, p.318)

3. இலங்கையில் ஏழாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முஸ்லீம்களின் நீராவி இயந்திர (Hydrolic Engineering) தொழில்நுட்பமே முக்கிய காரணமாக அமைந்திருந்தன. முஸ்லீம்கள் இத்தொழில்நுட்பத்தை அவர்களின் சர்வதேச பிரயாணங்களின் மூலம் கற்றுக்கொண்டனர்.
(R.A.L.H.Gunawardana, "Total Power or shared Power" Seminar for Asian Studies, Paper No. 4, University of Peradeniya, 1983)

இவ்வாறு முஸ்லிம்கள் இலங்கையின் வர்த்தகம், வெளிநாட்டு வியாபாரம், பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள், வீடமைப்பு, பொருளாதார விருத்தி என்பனவற்றுக்கு மிகப் புராதன காலம் தொட்டே செய்த பங்களிப்புகள், பல்வேறு ஆய்வாளர்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் மிகத் தெளிவாக ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறுவதற்கு இச்சிறு கட்டுரையில் முடியாது.

ஏன், இன்று கொழும்பில் தலை நிமிர்ந்து நிற்கும், கொழும்பின் கம்பீரத்தையே உலகுக்குப் பறைசாற்றும், கொழும்பு மாநகர மண்டபக் கட்டிடம், கொழும்பு நூதனசாலைக் கட்டிடம் என்பவை ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முஸ்லிம் ஒருவராலேயே நிர்மாணிக்கப்பட்டது. அம்முஸ்லிமின் வேண்டுகோளுக்க ஏற்ப, நூதனசாலை இன்றும் வெள்ளிக்கிழமைகளில் மூடப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

ஆசியாவிலேயே பெரிய பல்கலைக்கழகமாக, 1942இல் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்கு மூலகாரணமாக இருந்தவர்களில் ஒருவரான நீதிபதி அக்பரை கௌரவித்து பெயரிடப்பட்ட பேராதனை பல்கலைக்கழக 'அக்பர் மண்டபம்' இன்றும் அங்கே உள்ளது. கொழும்பு புறக் கோட்டைப் பகுதியிலுள்ள புராதன கட்டிடங்கள் பல, முஸ்லிம்களின் கட்டடத் தொழில்நுட்பத்தை இன்றும் பறைசாற்றிக் கொண்டுள்ளது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாளால் பரப்பப்பட்ட மதம் 'இஸ்லாம்' என்று ஒரு கருத்தை சில எழுத்தாளர்கள் முன்வைத்திருந்தார்கள்.

ஆனால் உலக வரலாற்றாய்விலும் அறிவியல் அரங்கிலும் புகழ்பெற்று விளங்கிய பேட்டன் றஸ்ஸல், ஹிட்டி, மைக்கல் ஹாட், கிரௌபோர்ட், லிவிங்ஸ்டன், எஸ்.எஸ்.லீடர், ஏ.ஜே.ரொயின்பி, ஜீன். ஏல். ஹியுரெக்ஸ், டி.டபிள்யு. அர்னால்ட், ஜீன் எல்.ஹெரக்ஸ் போன்ற பல்வேறு சர்வதேச ஆய்வாளர்கள் வரலாற்று நிருபணத்தின் ஊடாக, இஸ்லாத்துக்கு எதிரான இக்கருத்தை முற்றாக நிராகரித்து, உலக அரங்கில் ஒரு தெளிவை ஏற்படுத்தினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதன் பெறுபேறாக உலக அரங்கில் இருந்து முற்றாக அக்கருத்து நீக்கப்பட்டது.

இவ்விடயத்தில் தமிழ் பேசும் உலகின் மதிப்பைப் பெற்ற அறிஞர் அண்ணாவின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். "இஸ்லாம் வாளால் பரப்பப் பட்டது என்ற கூற்று அர்த்தமற்றது. இஸ்லாத்தைப் பரப்ப வாள் பயன்படவில்லை. ஆனால் சிலுவை யுத்தங்களிலே இஸ்லாத்தைக் காக்க அது பயன் பட்டதுண்டு. இந்தியாவில் முகலாயர் ஆட்சியும், மற்ற முஸ்லிம் மன்னர் ஆட்சியும் இருந்தபோது முஸ்லீம்கள் ஒரு கோடிப் பேர் கூட இருந்ததில்லை. அந்த அரசுகள் எல்லாம் மறைந்தபின்பே பத்துக் கோடி மக்களாக முஸ்லீம்கள் பெருகினர். 'ஒன்றே குலம். ஒருவனே தேவன்' என்ற நன்நெறி பரவி இருந்த நாட்டிலே இடையிடையே அக்கருத்துக்கள் மறைந்திருந்த நிலையில் அக்கருத்துக்களை மீண்டும் வலியுறுத்த 1300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இஸ்லாம் பரவிற்று."

'முஹம்மதுவும் சொலமனும்' என்ற பிரபல நூலை எழுதிய மற்றொரு அறிஞரான ஹென்றி பிரேன்(Henry Bran) பின்வருமாறு கூறுகிறார். "மேல் நாட்டவர்கள் இஸ்லாம் மார்க்கம் பலாத்காரத் தினாலும் தீவிர பிரச்சாரத்தினாலும் பரப்பப்பட்டது என வாதிக்கிறார்கள். உண்மை அவ்வாறல்ல. இஸ்லாத்தின்பால் ஒருவரைத் திருப்பு வதற்கு பலாத்காரத்தை உபயோகிப்பதை குர் ஆன் அழுத்தமாகக் கண்டிக்கிறது. இஸ்லாம் வேண்டுவ தெல்லாம், அல்லாஹ்வுக்கு வழிப்படுதல் மட்டுமே. ரோமர்கள் கிறிஸ்தவ சமயத்தை ஏற்ற போது அவர்களின் மனம் மட்டுமே மாறுதல் அடைந்து இருந்தது. ஆனால், அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதும் அவர்களின் ஆன்மாவும் உடலும் பெரு மாற்றத்தைக் கண்டன. இது பெரும் மாறுதலாகும்."

சரித்திர நாவலாசிரியரான சாண்டில்யனின் கூற்று பின்வருமாறு அமைந்துள்ளது. "முஸ்லிம் சமூகத்திடம் எனக்கு எப்பொழுதும் பெரும் மதிப்புண்டு. அவர்களின் மதபக்தியிலும் இன ஒற்று மையிலும் பத்தில் ஒரு பங்கு கூட ஹிந்துக்களுக்கு இருந்திருந்தால் ஹிந்துஸ்தானத்தை முஸ்லிம்கள் வென்றிருக்க முடியாது என்று நான் நினைத்த நாட்கள் உண்டு. ஆகவே ஹிந்துக்களின் மத நம்பிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, முஸ்லிம்களிடம் எனக்கு பொறாமை ஏற்படுகிறது என்று சொன்னால் அது பொய்யல்ல. அவ்வளவு ஆழ்ந்த மத பக்தி, சிறந்த ஒருமைப்பாடு முஸ்லிம்களுக்கு உண்டு."

## மக்களும் மார்க்கமும்

இஸ்லாம் 7ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மொகமட்டினால் ஸ்தாபிக்கப்பட்டது. 8ம் நூற்றாண்டில் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. அக்காலகட்டத்தில் வாழ்வும் ஆன்மீகமும் ஒன்றாக இணைந்ததால் இவ்வளர்ச்சி ஏற்பட்டதாக கருதப்படுகிறது. இஸ்லாம் மதத்தில் சியா, சுனி, சுபிஸம் என்ற பிரிவுகள் உண்டு.
தகவல் : World Atlas Encyclopedia - 1999

உலகில் 880 மில்லியன் முஸ்லீம்கள் வாழ்கின்றனர். இவர்களில் 95% சுனி பிரிவினர். கிறிஸ்தவர்கள் 1,667 மில்லியனாகவும் இந்துக்கள் 663 மில்லியனாகவும் உள்ளனர்.
தகவல் : Concise World Atlas 3rd Edition 2000

இலங்கை சனத்தொகையில் 8 வீதம் 1.5 மில்லியன் இஸ்லாமியர்கள் உள்ளனர். பௌத்தர்கள் 69 வீதம் 13.2 மில்லியனாகவும் இந்துக்கள் 15 வீதம் 2.8 மில்லியனாகவும் கிறிஸ்தவர்கள் 8 வீதம் 1.5 மில்லியனாகவும் உள்ளனர்.

இவ்வாறு இஸ்லாத்தின் வெற்றிக்கும் அது சர்வதேச மதமாக மாற்றம் பெற்றமைக்கான காரணங்களை பல்லாயிரக்கணக்கான அறிஞர்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களிலிருந்து திரட்டித்தர முடியும்.

இலங்கை முஸ்லிம்கள் தம்மை முஸ்லிம்கள் என்றே அடையாளப்படுத்த விரும்புகின்றனர். அது அவர்களின் உரிமையாகும். அவர்களை இஸ்லாமி யத் தமிழர் என்றோ வேறு பெயர்களிலோ அடையாளப்படுத்த எவருக்கும் உரிமை கிடையாது.

இலங்கையின் வரலாற்றில் 1879ம் ஆண்டில் இருந்தே முஸ்லிம்களைத் தமிழர்களாக இனம்காட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதன் முதலான பலரால் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் இன்றுவரை வெற்றி பெறவில்லை. 'இஸ்லாம் எமது வழி. தமிழ் எமது மொழி' என்பது இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்களைப் பொறுத்தவரை யதார்த்தமாகும். இலங்கையில் முஸ்லிம்களின் பகிரங்க விரோதி களாகத் தம்மை ஆரம்பத்திலிருந்தே அடையாளப் படுத்திக்கொண்டு ஆட்சி செய்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கை முஸ்லிம்களின் தனித் துவத்தை சகல அரசியல் அமைப்புச் சட்டத்திலும் ஆவணங்களிலும் வழங்கிப் பாதுகாத்துள்ளனர். □

www.tamilarangam.net



**அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு விடுதலைப் புலிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வரும் வட கிழக்கு மாகாண இடைக்கால அரசாங்கத் திட்டத்தைப் பற்றி எனது சிந்தனைக் கருத்துக்களே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இடைக்கால அரசின் அமைப்பும் நிர்மாணமும் வரவிருக்கும் நிரந்தர அரசின் சாயலை அண்டியே இருக்க வேண்டும். இந்தக் கோணத்திலிருந்தே எனது கருத்துக்கள் பெரும்பாலும் வரையப்பட்டன. இந்தப் போக்கை அனுசரித்தே புலிகளினால் நிர்மாணிக்கப்படும் மாற்றுப் பிரேரணையும் அமையும் என எதிர்பார்க்கலாம். ஆ-ர். (29-08-2003)**

## எப்படி அமைக்கலாம் :

# இடைக்கால நிர்வாக அரசு



பேராசிரியர்
**கோபன் மகாதேவா**
MSc, PhD, FIMfgE, FIEE, FCMI,
Hon DLitt

மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர்:
**A PLAN FOR PEACE IN EELAM**
(ISBN 873265-06-9) எனும் நூலைப் பார்க்கவும். இதன் பிரதிகளுக்கு கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

### வ-கி மாகாண இடைக்கால ஆட்சிமன்றப் பிரேரணைகள்:

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு விடையாக, சிறீலங்கா அரசு அடுத்தடுத்து 3 குறைவான பிரேரணைகளை அனுப்பியிருந்தது. அவற்றைப் புலிகள் ஏற்க மறுத்த படியால், திரும்ப, 2003 ஜுலை 17 அன்று தம் 4வது பிரேரணையை ஒரு கலந்தாலோசனைப் பத்திரமாக சமாதானத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் மூலம், புலிகளின் அரசியல் பகுதித் தலைவர் தமிழ்ச் செல்வனுக்கு அரசு அனுப்பியது.

இந்தக் கடைசிப் பிரேரணையைப் புலிகள் தம் சட்ட நிபுணர்கள் குழுவுடன் ஆகஸ்டு 21ந் திகதி தொடக்கம் பரீஸ் நகரில் ஒரு கிழமையாக ஆராய்ந்து, தம் விடையுடன் ஒரு மாற்றுப் பிரேரணையைத் தாம் கூடிய சீக்கிரம் அரசினர் கைக்கு அனுப்பி வைப்பதென அறிவித்தனர். இந்தப் பின்னணியில், வேறு ஒரு பிரேரணையின் விபரங்களும் இன்று மட்டும் ஒருவராலும் வெளியீட்டப் பட்டிராத படியால், அரசினரின் கடைசிப் பிரேரணையின் அம்சங்களை நாம் இன்று இங்கு ஆராய்வது பொருத்தமாகும்.

தங்கள் பிரேரணையைக் கலந்தாலோசனைப் பத்திரம் (Discussion Paper) என்றே UNF அரசு அழைத்திருக்கின்றது. எனவே, முதலாவது, புலிகள் தமது பிரேரணைகளை அப்படியே ஏற்கமாட்டார்கள் என்பதையும், இரண்டாவது, இப்பிரேரணைகள் கூட எத்தனையோ சுற்றுப் பேச்சுக்களின் பின்னரே முடிவாக்கப்படும் எனவும் அரசு கணித்து உள்ளது. இந்தப் பிரயத்தனத்தில் சில மாதங்கள் (வருடங்கள்கூட) இழுபடுவதை அரசு விரும்புகிறது எனவும் கூறலாம். புலிகளிடமிருந்து கெதியில் விடையொன்றைத் தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் சொல்லியிருக்கின்றனர்.

இந்த நிலையில், ஒரு உகந்த விடையைப் புலிகள் கடுகெதியாகக் கொடுத்து இடைக்கால ஆட்சியினால் சாதிக்க எண்ணும் புனருத்தாரண வேலைகளையும் மறுகுடியிருப்பு, அபிவிருத்தித் திட்டங்களையும் தாமதியாமல் உலகப் பண உதவி உடன் தொடங்கி, வ-கி மக்களின் உடனடி, நாளாந்தப் பிரச்சினைகளைக் குறைப்பதே உசிதம் எனப்படுகிறது.

### கிழக்கையும் வடக்கையும் பிரிக்கும் பிற்போக்கு எண்ணம்:

இரண்டு மூன்று இடங்களில் தம் பத்திரத்தில், அரசு, வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் பிரித்தே குறிப்பிட்டிருக்கிறது. அதாவது, Northeastern Province என்று சொல்லாமல் Northern and Eastern Provinces என்றே அழைத்திருக்கின்றனர். அவர்களின் மனப் பானைக்குள் பதுங்கும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மறைவான எண்ணத்தை நாம் மேற்படிப் பதங்க ளாகிய அகப்பைகளில் துப்புக்கான முடிகிறது.

இதில் ஆச்சரியம் என்னவெனில் இந்தப் பத்திரம் புலிகளுக்கு அனுப்பப்பட்டபின்னர், ஆனால் தனக்கு அது அனுப்பப்படவில்லையென நெருப்புக் கக்கிவிட்டு, சனாதிபதி அம்மையாரே தான் கிழக்கையும் வடக்கையும் பிரிக்க எண்ணி அவ்விடயத்தைப் பரிசீலனை செய்வதாக அறிக்கை விட்டிருக்கிறார். இது, பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் இதைப் போன்ற விடயங்களில் இரகசியக் கலந்தாலோசனைகள் இருக்கும் சாத்தியக் கூறுகளையே காட்டுகின்றது. மாகாணப் பிரிவினை எண்ணத்துக்குக் கொடுக்கப்படும் சாட்டு, அண்மையில் கிழக்கில் நடந்த இரு முஸ்லிம் இளைஞரின் மறைவைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளே.

எது எப்படியெனினும், வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதைத் தமிழர்கள் ஏகோபித்தும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், எதிர்க்கின்ற னர். இப்பிரிவினைத் துஷ்ட எண்ணத்தைத் தமிழர் தலைவர்களாகிய புலிகள், முஸ்லிம் தலைவர்களின் பக்கபலத்துடன் சாணக்கிய வழிகளில், முளை யிலேயே, இந்தக் கட்டத்திலேயே, கிள்ளி எறிந்துவிட எண்ணுவர். அது சித்திக்கும் எனவும் நாம் எதிர்பார்க்கலாம்.

## சபையின் தற்காலகத் தலைமைப் பதவி:

உத்தேச சபையின் தலைமைப் பதவிக்கு இரு மாற்று எண்ணங்கள் அரசு தந்திருக்கிறது. முதலான இணைமுறை, அரசுக்கும் புலிகளுக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கும். ஆனால் இருவருக்கும் வீற்ரோ (Veto) உரிமையையும் அளிக்கும். வீற்ரோ அம்சமோ, தமிழருக்குச் சாதகமாகவும் இருக்க லாம், பாதகமாகவும் பாவிக்கப்படலாம். இம்முறை தரக்கூடிய வெற்றி இரண்டு தலைவர்களின் குணாதிசயங்களையும் பொறுத்திருக்கும்.

இரண்டாவது முறை, ஒரே ஒரு தலைவரு க்கு வழிகோலுகிறது. இதன்படி, ஒரு புலியே தலை வராகும் சாத்தியம் எழுத்தின்படி உண்டு. ஆனால், சபைக் கூட்டங்களில் முடிவுகள் எடுக்கும்போது, முஸ்லிம், சிங்களப் பிரதிநிதிகளில் பெரும்பான்மை யினரின் இணக்கமில்லாமல் அம்மக்கள் சம்பந் தப்பட்ட முடிவுகளை எடுக்கமுடியாது.

அதாவது, இரண்டாவது முறையில், மறை முகமாக 6-7 பேருக்கு வீற்ரோ அதிகாரம் கொடுக்கப்பட்டு உள்ளது. எனவே, எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப்பார்த்து, இவற்றில் எந்தமுறை இடைக்கால நிலைக்கு உகந்ததெனச் சிந்தித்துச் சரியான முடிவை எடுக்க வேண்டும். முதலாவதே கூடிய உசிதம்போல் தோன்றுகிறது.

## சபையின் பருமனும் அங்கத்துவ விகிதமும்:

ஒரு சபையின் அங்கத்தினரின் மொத்தத் தொகை கூடக்கூட, விவாதங்களுக்கு கூடிய நேரம் பிடிக்கும். முடிவுகள் எடுப்பதும் சிக்கலாகவும் கஷ்டமானதாகவும் இருக்கும். இது நடைமுறை அனுபவம். முகாமைத்துறையின் விஞ்ஞான ரீதியான முடிவும் இதே.

எனினும், புலிகளுக்குப் பெரும்பான்மை ஏற்படுத்த, புலிகளின் சபை அங்கத்தினரில் இருந்து எட்டு மாகாணங்களுக்கும் எட்டுப் பிரதிநிதிகள், தலைவர் ஒருவருமாக, குறைந்தது ஒன்பது புலிக ளின் அங்கத்தினராவது வேண்டும். அரசே புலிகளுக்குச் சபையில் பெரும்பான்மை கொடுப்பது எனப் பிரேரித்துள்ள படியால், முஸ்லிம், UNF, PA அங்கத்தினரின் தொகை, கூடியது 7கவே இருக்கமுடியும். எனவே மொத்தம் 16 அங்கத்தினர் கொண்ட சபையே சாத்தியம் எனப்படுகிறது. மற்ற ஏழுபேரும் யார் யார் என்பதைப் புலிகள் தாமாக முடிவாக்க முடியாது. எனினும் அதைப்பற்றிச் சிந்திக்காமலும் விடமுடியாது.

## இவ்வேழு பேரையும் பற்றிய சிந்தனை பின்வருமாறு:

நான்குபேர் UNF இலிருந்தும் அவரில் இருவர் SLMC ஆகவும் ஒரு இந்தியத் தமிழரும் வந்து, ஒரு முஸ்லிம் உட்பட மூவர் PA ஆகவும், மேலும் UNF பெருந்தன்மையாக இணங்குமானால், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தா ராஜபக்ச PA சார்பில் வந்து சபையின் இணைத் தலைவராகத் தெரிவும் செய்யப்பட்டால் (அதாவது, புலிகளின் இணைத் தலைவருடன்), மொத்தம் ஒன்பது இலங்கைத்தமிழர் (புலிகள்), ஒரு இந்தியத்தமிழர், மூன்று முஸ்லிம்கள், மூன்று சிங்களவருமுடன், எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பினூடனும் இடைக்கால வ-கி சபை மாகாண இனவீதத்தின்படி செயற்பட்டு நிரந்தர அரசியல் தீர்வுக்கும் வழிகோலலாம் என்று கருத இடமுண்டு.

மேற்படி சபையில் UNF பலமிழந்ததுபோலக் காணப்பட்டால் அது ஒரு பிரமையேயன்றி உண்மையல்ல. ஏனெனில் மேலே கூறிய அங்கத்துவத்துக்கு அவர்கள் இணங்கினால் அவர்களுக்குப் புலிகளின் ஆதரவும் நம்பிக்கையும்

www.tamilarangam.net



அதிகரிக்கும். எதிர்க்கட்சியின் எதிர்ப்பும் சந்தேகமும் குறையும். சனநாயகமும் சமாதானப் போக்கும் முன்னேறும். பாராளுமன்றத்தில் மறுதேர்தலுக்கு முன்னரே மூன்றிலிரண்டு ஆதரவும் UNFஉக்குத் தேவையானபோது கூடிடவும் வழிபிறக்கும். மேலும், மத்திய நிர்வாக அதிகாரத்தின் மூலம் அரசை நடத்தும் அவரிடம் கடிவாளம் மறுதேர்தல்வரை இருக்கவே இருக்கும், மேற்படி அங்கத்துவத் திட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படின்!

## மாவட்டக் குழுக்களும் உபகுழுக்களும்:

மாகாணசபையின் கீழ் எட்டு மாவட்டக் குழுக்கள், அரசின் பிரேரணையின்படி ஏற்படுத்துவது உசிதமே எனலாம். ஏனெனில், அக்குழுக்களே சபை முடிவுசெய்யும் திட்டங்களை நிறைவேற்றும் கரங்கள். எனினும் அவ்வெட்டு மாவட்டக் குழுக்கள் ஒவ்வொன்றின் கீழும் உபகுழுக்கள் அமைப்பது இந்த இடைநிலைக் கட்டத்தில் நிர்வாகச் சிக்கல்களைக் கூட்டி, நடக்க விருக்கும் கட்டிட, புனருத்தாரண வேலைகளைத் தடைப்படுத்துமே அல்லாமல் குறைக்குமென எதிர்பார்க்க முடியாது.

## சபையின் ஆயுளும் காலாகால மதிப்பீடும்:

அரசின் சிபார்சின்படி உத்தேச இடைக் காலச் சபையின் ஆயுளை 2 - 3 ஆண்டுகளாக்கி, ஒவ்வொரு 6 மாதங்களின் முடிவிலும் அச்சபையின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வது நன்றே. ஏனெனில் இன்னும் 2 - 3 வருடங்களுள் இலங்கையின் இனவழி அரசியல் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் நிரந்தரத் தீர்வைக் காணமுடியுமென எதிர்பார்க்கலாம். ஆனால் ஆறுமாத மதிப்பீடுகளை வெளிநாட்டாரே, முக்கியமாக, வடகிழக்குப் புனருத்தாரண, அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் தரும் உலகநாடுகளின் பிரதிநிதிகளின் குழு ஒன்றே செய்வது எல்லாவழியிலும் சாலச் சிறந்தது என்பேன்.

## திறமையைக் கூட்டச் சிறுசிறு-திட்ட நிர்மாண அமைப்பு:

உத்தேச இடைக்காலச் சபையினால் அமுல் நடத்தப்படும் கட்டிட, புனருத்தாரண, பழுதுபார்த்தல், மீள்குடியேற்றல் முதலிய வேலைகள் முழுவதும் சிறு சிறு திட்டங்களாக (i.e. as Projects) பிரிக்கப்பட்டு வெவ்வேறு திட்டத் தலைவர்களின் நாளாந்தப் பொறுப்பில் கையளிக்கப்பட்டுக் குறிப்பிட்ட கால எல்லைகளுக்குள் அமுலாக்கும் வரையறுப்புடன் பொறுப்பை அளிப்பதே சிறந்த நிறைவேற்று முறையாகும்.

அத்துடன், சாதாரண நிர்வாகமுறைகளும் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுத் துரிதமுறையில் இத்திட்டங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய அதிகாரங்கள் தளத்திலுள்ள திட்டத் தலைவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். ஆனால், மேற்கூறிய திட்டத் தலைவர்களுக்கு மாவட்டச் செயலாளர்களும் மாகாணசபையின் தலைமையகத் திணைக்களங்களும் வேண்டிய சகல உதவிகளையும் உடனுடன் தாமதமேதுமின்றி அளித்தல் மிகமுக்கியம்.

## சபையின் பொறுப்புகளும் வேலைப்பிரிவுகளும்:

உத்தேசச் சபையின் கட்டுப்பாட்டினுள்ளும் பொறுப்பிலும் வரும் வேலைகளும் துறைகளும் என்ன? புனருத்தாரண, கட்டிட வேலைகள், மீள்குடியேற்றம், யுத்தச் சேதங்களைப் பழுதுபார்த்தல், பொருளாதாரம், நிர்மாணம், நிர்வாகம், மேற்பார்வை என்பன வெவ்வேறு இடங்களில் கலந்தாலோசனைப் பத்திரத்தில் பொதுவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

## வேண்டும் என்றே தவிர்க்கப்பட்ட பொறுப்புகள்:

முக்கியமான நிலம், வருமானம், பொலிஸ் துறை, பிரதேசக்காவல், என்பன குறிப்பாக வெளியேற்றப்பட்டுள்ளன. இவ்வாறு தவிர்க்கப்பட்ட ஒவ்வொரு துறைகளைப்பற்றியும் கடுமையான பேச்சுவார்த்தைகள் நடத்தவே வேண்டும். இவைகளையும் புலிகள் பெரும்பான்மையுள்ள சபைக்குக் கீழ் அடக்குவதில் (அரசின் நோக்கிலுங் கூட) ஆபத்தில்லையென விவாதிக்கப் பலமான இடம் உண்டு.

எப்படியெனில், இடைக்கால நிர்வாகத்தின் கீழ், பொறுப்பு முழுதும் புலிகளிடம் மட்டும் கொடுக்கப்படவில்லை. அரசும், எதிர்க்கட்சியும், மற்றைய இனங்களின் பிரதிநிதிகளும் இடைக்காலத்தில் கூட்டாட்சி செய்யப் போகின்றனரே? வடகிழக்கின் பிரதேசப் பாதுகாப்பை மட்டும் வேண்டுமானால் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக, உதாரணமாக, இந்தியா, அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் கடலெல்லைகளை மீறல், உளவறிதல் போன்ற செயல்களுக்கு எதிராகப் புலிகளின் அதிகாரத்தின் கீழ் வட கிழக்கினதும் இலங்கை அரசினதும் படைகள் கூட்டுக்காவல் புரியலாம்.

வடகிழக்கிலுள்ள உடனடி வேலைகளைத் துரிதமாகச் செய்து நிறைவேற்றுவதற்கும் திட்டமிடல், அமுல் நடத்தல், மேற்பார்வை, முதலீட்டுப் பிரிவினை முதலிய நிர்வாக வேலைகளுக்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னர், நிரந்தர நிர்வாகத்துக்குத் திணைக்களங்கள், அமைச்சுக்கள் அமைக்கவும், இன்றுள்ள வேலைகளையும் பொறுப்புக்களையும் சிறிய, வெவ்வேறுபட்ட கூறுகளாகப் பின் வருமாறு பிரித்தல், மிக உதவுமெனவும் உசிதமெனவும் கருதப்படுகின்றது.



மாவீரர் உறங்கும் இல்லம்

சிபார்சு செய்யப்படும் துறைப் பிரிவுகளாவன:

0 ஆரம்ப, மத்திய பள்ளிகள்
0 வாசிகசாலைகள், நூலகங்கள்
0 தெருக்கள், பெரும்பாதைகள்
0 கடல், வான் போக்குவரத்து
0 சிகிச்சைமனைகள்
0 பல்கலைக்கழகங்கள்
0 பொதுமக்கள் சுகாதாரம்
0 குடிதண்ணீர், நீர்ப்பாசனம்
0 மின்சாரம், எரிநெய்வகை, விறகுவகை
0 வங்கிகள், வர்த்தக நிலையங்கள்
0 சிறு, பெரு கைத்தொழில்கள்
0 வீடமைப்பும் பழுதுபார்த்தலும்
0 பண நிர்வாகம், அரசாட்சிச் செலவுகள், சம்பளங்கள், முதலியன
0 மீள்குடியேற்றம்
0 உணவுற்பத்தி, உணவு விநியோகம்
0 மீன்பிடித்தலும் விநியோகமும்
0 பொருட்கள், பண்டங்கள் வாங்கி விநியோகம்
0 SLMM தொடர்புகள்
0 பொலிஸ் தொடர்புகள்
0 பட்டாள, கடற்படைத் தொடர்புகள்
0 உலக நிதியளிப்பாளர் தொடர்பு
0 மத்திய அரசுடன் தொடர்பு
0 ஊழியர் தெரிவு, வேலை நீக்கல்
0 கலாச்சார நிகழ்ச்சிகள்
0 இத்தியாதி... இத்தியாதி...

(மேற்கொடுக்கப்பட்டுள்ளன உதாரணங்களே. தேவையின்படி இவை மேலும் பிரிக்கவும் படலாம், இணைக்கவும் படலாம்)

## மாகாணசபை ஆணையாளர் பதவி, பொறுப்புகள் முதலியன:

உத்தேச சபையின் வேலைகளை நடாத்த ஒரு விசேட ஆணையாளரின் நியமனம் கலந்தாலோசனைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளது. ஆனால் அவர் நியமனம், சபையின் பெரும்பான்மை இணக்கத்துடன் அரசினாலேயே செய்யப்படுமென வரையப்பட்டுள்ளது. இந்த இடைக்கால அதிகாரி ஒரு தமிழராகவே இருத்தல் நன்று. அவரின் நியமனம் சபையினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படுதலே நலம். வேண்டிய நேரம் அவரை வெளி அனுப்பும் அதிகாரமும் சபைக்குக் கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய விசேட ஆணையாளரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வடகிழக்கில் வேலைசெய்யும் சகல அரசாங்க ஊழியர்களும் வெளிநாட்டு ஊழியரும் நிறுவனங்களும் வரவேண்டுமே அல்லாமல் வடகிழக்குக்கு வெளியிலிருந்து வேலை செய்யும் வேறொரு அதிகாரிகளுக்கும் கட்டுப்படப்படாது. இவ்வாணையாளரோ சபையின் கட்டுப்பாட்டுக்கு உள்ளேயே வேலைசெய்ய வேண்டும், என்பவை நியாயமான அம்சங்கள். இம் முக்கியஸ்தரை மிக மிகக் கவனமாகத் தெரிவுசெய்யவும் வேண்டும்.

## மேல்நாட்டு நிதியின் கண்காணிப்பு:

மேல்நாட்டிலிருந்து வரும் நிதியின் கண்காணிப்பும் பங்கீடும் அதிமுக்கியமானது. அப்பணங்கள் மற்றைய மாகாணங்களுக்குச் செலவு செய்தல் கூடாது. உடன் செலவுகளுடன், இடைக்கால அபிவிருத்திக்குமாக NERFஎன்னும் அமைப்பின் பெயரையும் பொறுப்பையும் மாற்றி NERRF என்ற பெயருடைய ஒரேயொரு, வெளிநாட்டு நிதிக்குத் துணையான, கணக்கீட்டுமுறையை அரசு சிபார்சு செய்திருக்கிறது. இந்தப் பிரேரணை நிர்வாக முறையைச் சீர்படுத்தும் என்று ஏற்றுக் கொண்டாலும், ஒரு இடைக்காலக் கணக்குமுறையை, உண்மையில் அக்கணக்கேடுகளுடன் இணைந்த, பணமுடைய, வங்கிக் கணக்குகள் இல்லாமல் எப்படி அதை The Special Fund என்று அழைக்கலாம்? அதை The Special Account என்றே அழைக்க வேண்டும். கோடிக்கணக்கில் பணத்தை நன்கொடையாகப் பெற்றுப் பொதுப் பணமாகச் செலவு செய்யும் போது ஊழல்கள் சுழிப்புகள் மோசடிகள் நடக்காமல் காக்க வேண்டுமல்லவா?

## குறிப்பு:

இடைக்கால அரசு பற்றிய உங்கள் கருத்துக்களையும் தேசத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

www.tamilarangam.net



# புலம் பெயர்ந்த தமிழர்களின் சமூக முன்னேற்றமும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்



வி சிவலிங்கம்
அரசியல் ஆய்வாளர்

மேற்குலக நாடுகளில் வாழும் நாம் அந்த நாடுகளில் உள்ள ஊடகங்கள் மக்கள் மேல் செலுத்திவரும் செல்வாக்கை நன்கு உணரக் கூடியதாக உள்ளது. அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றையும் விட ஊடகங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள் மிகவும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தொலைக்காட்சிச் சேவை மிகவும் பரந்த அளவில் மக்களால் பயன் படுத்தப்பட்டு வருகின்றமையால் பத்திரிகைகள் காலப்போக்கில் அழிந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பத்திரிகைகள் இன்னமும் பலத்துடன் செயற்படுகின்றன. இதற்குக் காரணம் பத்திரிகைகள் தமது செயற்பாட்டை மாற்றி அமைத்து வருவதேயாகும். தொலைக்காட்சி மூலம் நாம் ஒரு சம்பவத்தை நேரில் பார்க்க முடியும். ஆனால் அதற்கான பின்னணியை நாம் அறிய முடியாது. ஏனெனில் அவை திரைமறைவில் திட்டமிடப்படுகின்றன. இவற்றை வெளிக்கொணர்வதில் பத்திரிகைகளே முதன்மை வகிக்கின்றன.

உதாரணமாக, பிரித்தானிய ஆட்சி பீடத்தில் முன்னர் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் முன்னாள் அமைச்சர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அலங்கோலங்கள் பத்திரிகைகளால் அம்பலப் படுத்தப்பட்டன. இதனால் பலர் இராஜினாமாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாயிற்று. அமைச்சர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் கோணங்களை வெளிப்படுத்துவதற்கான காரணம் என்ன என நாம் பார்ப்போமாயின் அரசியலைச் சுத்தப்படுத்துவதே அதன் அடிப்படை நோக்கமாக உள்ளது. அதாவது அமைச்சர் என்பவர் சமூகத்திற்கு முன் உதாரணமாகவும் வழிகாட்டியாக வும் அமைய வேண்டும் என்பது அதன் குறிக்கோளாக அமைகின்றது. அங்கே அமைச்சர் என்ற பதவியைப் பற்றியே அவர்களது கவலை உள்ளது.

சமூகம் என்பது உயர்ந்த இலட்சியங்களை நோக்கியே நகர்த்தப்படுகின்றது. இந்த உயர்ந்த இலட்சியங்களை சமூகத்தின் உயர் கட்டுமானங்கள் பிரதிபலிக்க வேண்டும். ஒரு கொலைகாரன் அல்லது சமூகவிரோதி அல்லது சமூக இலட்சியங்களுக்கு மாறாகச் செயற்படும் ஒருவர் சமூக நிர்மாணத்தின் உயர் பதவிகளைக் கைப்பற்றும் போது அந்த உயர் பதவியின் உயர்ந்த சமூக இலட்சியங்கள் மாசுபடுகின்றன. எனவே அந்த உயர் பதவிகளில் உட்காருபவர்கள் அதனைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதில் இப்பத்திரிகைகள் கண்ணும் கருத்துமாக உள்ளன.

மேற்கு நாடுகளில் செயற்படும் ஊடக ங்கள் இவ்வாறு செயற்படுவதால் அவ்வாறான செயற்பாடுகள் சமூகத்தின் சகல பகுதிகளிலும் எதிர்பார்க்கப் படுகின்றது. உதாரணமாக மேற்குலக சமூகத்தில் பல்வேறு இனக்குழுமங்கள் உள்ளன. தமிழர்களும் அவ்வாறான ஓர் இனக் குழுமத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துபவர்களே.

தமது ஜனநாயக உரிமைகளுக்காக சுமார் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்து உள்ளார்கள். ஓர் உயர்ந்த நெறிக்காக அதிக விலை கொடுத்த மக்களின் நலன்கள் குறித்து அக்கறையும் கவலையும் கொள்வது தமிழர்கள் என்பதைவிட மனிதாபிமான நோக்கம் என்பதே பொருத்தமானதாகும்.

இலங்கையில் ஏற்பட்ட ஜனநாயக உரிமையை நோக்கிய ஆயுதப் போராட்டம் கூடவே ஓர் இடப்பெயர்வையும் ஏற்படுத்தியது. இந்த இடப்பெயர்வின் காரணமாக மேற்குலக நாடுகளை நோக்கி ஒரு கூட்டம் மக்கள் ஓடினார்கள். இவ்வாறு உடுத்த உடையுடன் ஓடிவந்த நாம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்போது பெரும் சொத்துக்களுக்கு அதிபதிகளாக படிப்படியாக மாறி வருகின்றோம். 70 ஆயிரம் மக்களின் இரத்தம் சிந்திய தியாகத்திற்கு பிராயச்சித்தமாக அம்மக்களின் துயர் துடைக்க பல்வேறு வகைகளில் பல்வேறு நிறுவனங்களை அமைத்து உதவியும் வருகின்றோம்.

அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட போதும், சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்த மக்கள் ஆயுதப் போராட்டத்தின் விளைவால் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டு உள்ளனர். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாகவும், மனநோயாளர் களாகவும், உடல் ஊனமுற்றவர்களாகவும் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த நிலையிலும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு ஓர் இனம் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளமையைக் கண்டு கவலை கொள்ளாத தமிழர்களே இல்லை எனலாம். இதனால் அம்மக்களின் துயர் துடைக்க பல சமூக நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பலர் சமூகத் தொண்டர்களாக இருந்தனர். கூடவே சில சமூக விரோத சக்திகளும், சமூகத்தை உறிஞ்சி வாழும் ஒட்டுண்ணிகளும் இதற்குள் ஊடுருவிக் கொண்டன. உண்மையான சமூகத்தொண்டர்களை விட இந்த ஒட்டுண்ணிகளே மிகவும் தீவிரமாக உழைத்தனர். சமூக அந்தஸ்தையும் பெற்றனர். நாட்கள் செல்லச் செல்ல அவர்களது சுயரூபங்கள் வெளிப்படத் தொடங்கின. அவர்கள் சமூகத்தின் உயர் பதவி களை வகித்ததோடு மட்டுமல்ல, அப்பதவிகளைப் பாதுகாப்பதற்கான சட்டரீதியான பாதுகாப்புக்களை யும் ஏற்படுத்திக் கொண்டனர்.

இங்கே தான் நாம் எச்சரிக்கப்படுகின்றோம். சமூகத்தின் நிறுவனங்களை கூட்டுச் சதிகள் மூலம் கைப்பற்றியவர்கள், தமது கொள்ளையடித்தலைப் பங்கீடு செய்யும் போது பிரச்சினைப்படுகின்றனர். இதனால் சிலர் மிகவும் மெள்ளமாகத் தலைமறை வாகின்றனர். சிலர் போட்டி, பொறாமைகளை அம் பலப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஓர் இனத்தின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட இந்நிறுவனங்களில் ஊழல் புரியும் புல்லுருவிகளை தொடர்ந்தும் அப்பதவிகளில் வைத்திருப்பது அந்த நிறுவனங்களின் புனித நோக்கங்களை மாசுபடுத்துகின்றது. தனிப்பட்டவர் கள் இன்று இருக்கலாம். நாளை மரிக்கலாம். ஆனால் பொது நிறுவனங்கள் அப்படியானவை அல்ல. அவை ஆண்டாண்டு நிலைக்கவேண்டியவை. இவை ஊழல்வாதிகளின் இருப்பிடங்களாக மாறுமாயின் தாயகத்தில் அல்லல்படும் மக்களின் துயர்துடைக்க அமைப்புக்களே இல்லாமல் போய்விடுவதோடு மக்கள் பங்குபற்றுவதிலிருந்தும் விலகிக் கொள்வார்கள். இந்த ஆபத்தைத் தவிர்க்க வேண்டுமாயின், பொது நிறுவனங்கள் சுத்தப் படுத்தப்பட வேண்டும். அவ்வாறாயின் சமூகவிரோத சக்திகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

இப்பணியை யார் செய்வது? பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற கேள்வி எழுகின்றது. பத்திரிகையாளர்களே இதனை செய்ய வேண்டும். பத்திரிகையானது வரலாற்றின் முதற் பதிவைச் செய்கிறது. இந்த முதற் பதிவு சரியானதாக அமைய வேண்டும். இதனை பத்திரிகையாளனே மேற்கொள் வதால் தான் அவன் வரலாற்றின் முதல் ஆசிரிய னாகக் கருதப்படுகின்றான். பத்திரிகைகளே எமது சிந்தனையைச் செழுமைப்படுத்துகின்றன. உதார ணமாகத் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்தியவர்கள் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள், எனப் பத்திரிகை கள் ஆரம்பத்தில் வர்ணித்தன. தற்போது பேச்சுவார்த்தை நடத்தும் போது கடுமையான போக்காளர்கள் எனக் கூறி அதன் தாக்கத்தைத் தணித்து வருகின்றன.

மேற்கு நாடுகளில் பல தமிழ்ப் பத்திரிகைகள் காணப்படுகின்ற போதிலும் அவை சில செய்தி களைப் பிரசுரிக்காமல் தவிர்த்து வருகின்றன. அவ்வாறான செய்திகளில் இந்தப் பொது நிறுவன ஊழலும் ஒன்றாகும். சில செய்திகளைப் பிரசுரிக்கா மல் தவிர்ப்பதும் ஒருவகைச் செய்தித் தணிக்கை ஆகும். உதாரணமாக, தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை என்பதை எப்பத்திரிகையும் கூறத்தயாராக இல்லை. இதுவே செய்தித் தணிக்கையின் ஓர் அங்கமாகும். பொய்ச் செய்திகளைத் தொடர்ச்சியாகத் தருவதன் மூலம் அவற்றை உண்மையாக்கும் ஓர் முயற்சியும் தொடர் கிறது. பல தமிழ்ப் பத்திரிகைகள் தம்மை ஒரு நடுநிலையாளராகக் காட்டிக்கொள்ளப் பெரு முயற்சிகள் மேற்கொள்கின்றன. திட்டமிட்ட வகை யில் செய்திகளை இருட்டடிப்புச் செய்து நடுநிலை யாளராகக் காட்ட எடுக்கும் முயற்சி பசுத்தோல் போர்த்திய புலியின் நிலையாகும்.

இனி பொய்ச்செய்திகளை மிகவும் கச்சிதமாகத் திட்டமிட்ட வகையில் வார்த்தை அலங்காரங்களைப் பாவித்து மேற்கொள்ளப்படுகின் றது. மக்கள் அதனை உண்மை என நம்பும் அளவுக்கு இது நிறைவேற்றப்படுகின்றது. இதனால்

www.tamilarangam.net



# அந்தக் கண்ணீர்த்துளிகள்



என் மன அரங்கில்
உயிரைப் பிழிந்து
உடலினுள் நெளிந்து
மெத்த உணர்வுகள்
செத்துவிடும் அவலுள்
பகிர்ந்து
விழிகளில்
அந்தக் கண்ணீர்த்துளி...

சோர்வடையா ஞாபகங்கள்
சுதந்திர நினைவுகள்
மூழ்கிவிட
புதை மணற் தேசமாக
நினைவுகள் விழுங்கி
நள்ளிரவில் உறைந்து நின்று
நகங்கள் பிடுங்கி
நாதியற்ற நிலையில்
நனைக்க வரும் கண்ணீர்த்துளி...

நரைத்த சேலை
நிலவைக் காணும்
நேரில் ஏக்கம்- என்
விழிகளில் துடிக்கும்
சிவப்புகள் தெறிக்க
சிதறிய உடல்கள்...
வன்முறையால் மனித இனம்
துன்புறும் சேதிகள்
சோகத்தில் வரும் கண்ணீர்த்துளி...

பாராட்டுக்குரியவர்கள்
பாராட்டப் படவேண்டும்
ஒதுக்கிவிடும் மனிதரினுள்
மனிதப்பண்புக்கு
வலுக்கொடுத்து
வாழ்க்கையின் புகழைப்பாடுகின்ற-உன்
உணர்ச்சிமிக்க வார்த்தை கேட்டு
வாய்விட்டுச் சிரிக்கும்போது
அந்தக் கண்ணீர்த்துளி...

வேலை கர்ப்பம் துன்பம்
ஆதிக்க ஆண்
ஆட்டுகின்ற சிந்தனையுள்
உணர்வுகள் மேலோங்க
உலகப் பெண்ணினம்
உடைந்துவிடும் போது- உயிரை
உருக்கும் புகையினுள்
உதிரக்குழாய் வழியே
உதறும் அந்தக் கண்ணீர் துளி...

என் மனம் வெடிக்கும் போதும்
துரோகங்களைக் கண்டு விம்மும் போதும்
துயரத்தால் குருதிகள் குத்தும் போதும்
கொடுமைகளைப் பார்த்துக் கலங்கும் போதும்
வெம்மையுடன் வேதனைகள் வேகும்போதும்
சாதிக்க முடியாது இதயம் தவிக்கும் போதும்
எனக்கு ஆறுதல் தருவது கண்ணீர்த்துளி...

காலத்தின் முகங்கள்
கரைந்து சிதையும்
தேசத்தின் காயங்கள்- என்
கனவினில் அசையும்
இறகுகள் உதிர்ந்து-என்
விழிகளில் சுழலும்
இருப்பிடம் தொலைத்து
உறவுகள் வெறிக்கும்-என்
தனிமைக்காய் இரங்கும்
அந்தக் கண்ணீர்த்துளி...

அவன் என் இரகசியச் சிநேகிதன்
ஆரத்தழுவி என்னை ஆறுதல்
படுத்துபவன்
அவன் இல்லாமல் நானில்லை
நானில்லாமல் அவன் இல்லை
அவன்தான் அந்தக் கண்ணீர்த்துளி.

நவஜோதி
ஜோகரட்ணம்.

→

ஏனைய பத்திரிகைகளை அல்லது ஊடகங்களைப் பெரும் நெருக்கடிக்குள் சிக்க வைக்க முடியும். சில பலவீனமானவர்களுக்கு எதிராகப் பழிவாங்குதல்களை இவ்வாறு நம்பக் கூடிய விதத்தில் எழுத முடியும். எழுதவும் படுகின்றது.

இன்னொரு விதமான செய்தித் தணிக்கை என்னவெனில் சில சம்பவங்கள் குறித்து மௌனமாக இருப்பதாகும். இதுவே இன்று தமிழ்ப் பத்திரிகைகளில் அதிகளவில் காணப்படுகின்றது. எல்லாம் சுமுகமாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டும் ஓர் அணுகுமுறையே இதுவாகும். ஓர் உண்மையின் இடத்தை மௌனம் மாற்றீடு செய்து கொள்ளுமாயின் அந்த மௌனமும் ஒரு வகையில் பொய் என்றே அர்த்தமாகின்றது.

சில தனி மனிதர்களைக் காப்பாற்றுவதா? அல்லது பல மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் பொது நிறுவனங்களைப் பாதுகாப்பதா? என்பதை நாம் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

அமெரிக்க அறிஞர் நோம் சொம்ஸ்கி (Noam Chomsky) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "உண்மைகள் மனிதனின் ஞாபகத்திலிருந்து மறைவதாக எப்போது உணரப்படுகின்றதோ, அப்போது அதிகாரத்திற்கான கருவி ஒன்றிற்கான தளம் அமைக்கப்படுகின்றது." □□□□□□□□□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் முதல் யாழ்ப்பாணத்தில் பௌத்த மத எச்சங்கள் என்ற ஆங்கிலக் கட்டுரை ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உண்மையான வரலாறு ஆதாரங்களுடன் தரப்படுகிறது. யும்பு கோவளம், யம்புப் பண்ணை, யாப்பாணயன் பட்டினம் என்பது யாழ்ப்பாணம் ஆகியது. இந்தியாவிலும் இலங்கையிலும் புராதன காலம் தொட்டு வாழ்ந்த எழு மொழி பேசிய திராவிட இனத்தவரின் ஒரு பகுதியினர் தான் நாகர்கள். யாழ்ப்பாணத்து நாகர்கள் தமிழ் மொழியையே பேசியும் எழுதியும் வந்தனர்.யாழ்ப்பாணத்தில் பௌத்த மத கருவூலங்கள் கண்டெடுக்கப்பட்டது, அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டவில்லை, மாறாக தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தார்கள் என்றும் மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி, உதயணன் காதை, வீர சோழியம் ஆகிய தமிழ் பௌத்த காப்பியங்களுக்கு நிகரான ஒரு பௌத்த காவியம் சிங்களத்தில் உருவாக்கப்படவில்லை என்றும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி எஸ் தியாகராஜா ஆதாரங்களுடன் எழுதி இருந்தார்.



**'லோமா' என்ற எழுத்துக்கள் பூநகரி மட்பாண்டம் கி மு 300**

# பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் (02)



**கலாநிதி**
**எஸ் தியாகராஜா**
**வரலாற்று ஆய்வாளர்**

## தமிழகத்தில் பௌத்த மதம்

**பௌத்தத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயிருந்த தொடர்புகள் அற்றுப்போய் இப்போது ஆயிரம் ஆண்டுகளாகின்றன. இலங்கையின் சிங்கள பேரினவாதம் செய்த அட்டூழியங்களினால் இன்றைய தமிழர்கள் பௌத்தத்தை ஒருவிதமான வெறுப்புடன் பார்ப்பதை நாம் தவிர்க்க முடியாதுள்ளது. ஆனாலும் பௌத்தம் வரலாற்றுக் காலத்தில் தமிழ் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துக் காட்டுவது நமது கடமையாகும்.**



**கோவேதன் என்ற வாசகம் பொதிக்கப்பட்ட ஆனைக் கோட்டை வெண்கல அரச முத்திரை. கி மு 300 - கலாநிதி கா இந்திரபாலா, கலாநிதி க ரகுபதி**

**ஈழத்தமிழ் அறிஞர்கள் அதிகமாக ஆய்வு செய்யாத ஒரு துறை இதுவாகும். சமீபத்தில் கந்தரோடையிலுள்ள பௌத்தமத சின்னங்களை அழித்துவிட வேண்டும் என ஒரு அறிஞர் கூட்டம் மேற்கொண்ட நடவடிக்கைகளும், யாழ்ப்பாணத்தில் பௌத்த மத சின்னங்கள் இருப்பதனால் ஒரு காலத்தில் அங்கே சிங்களவர்களே வாழ்ந்தார்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




என ஒரு பிரபல தமிழ் எழுத்தாளர் எழுதியதும் இவர்களது வரலாற்று அறியாமையையே எடுத்துக் காட்டுகின்றது.

நாம் பெருமைப்படும் பண்டைத் தமிழர்களின் சின்னங்களான 'கொற்கை காத்த வீரவேழமும்', 'மதுரையிற் பறந்த மீன்கொடியும்' பௌத்த மதச் சின்னங்களே என்பதை அறியும் போது திராவிட நாகரீகத்தில் பௌத்தம் வகித்த உன்னதமான நிலையை இன்று நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கி.மு.500 ஆண்டுக் காலத்திலிருந்து கி.பி.1000 ஆண்டுக்காலம் வரை ஏறக்குறைய 1500 ஆண்டுகளாக பௌத்த மதம் தமிழகத்தின் முக்கியமான மதங்களில் ஒன்றாக விளங்கியது.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் சைவ சமய குரவர்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் ஏற்படுத்திய பக்தி வெள்ளம் தமிழகமெங்கும் பெருகி மற்றைய மதங்களைச் சிறிது சிறிதாக அமிழ்த்தி வீடும் வரை, பௌத்தம் திராவிட நாகரீகத்தின் சின்னங்களில் ஒன்றாகப் புகழ் பெற்றிருந்தது.

## பௌத்தத்தின் வருகை



1300 ஆண்டுகளுக்கு மேலாக தலை நகராக விளங்கிய அநுராதபுர பௌத்த மத எச்சாங்கள் இன்றும் பாதுகாக்கப் பட்டு வருவது குறிப்பித்தக்கது

கி.மு. 247ஆம் ஆண்டில் இலங்கையின் நாக அரசனான தேவநம்பியதீசன் பௌத்தத்தை ஏற்று அம்மதத்தைத் தனது நாட்டு மக்களிடம் பரப்பு வதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழகத் தில் பௌத்தம் பரவியிருந்ததற்கான ஆதாரங்கள் காணக்கிடக்கின்றன. வரலாற்றின் உதயகாலத் தைய, அகம்-புறம் என்ற கோட்பாடுகளுக்கமைய வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் சமயம் என்பது ஓர் அமைதியான வாழ்க்கைப் பண்பாகவே விளங்கியது. சிவன், பார்வதி, விஷ்ணு, குறிஞ்சிக்கடவுள் ஆகியன அவர்கள் வணங்கிய தெய்வங்களாக விளங்கின (1).

அவர்கள் கடைப்பிடித்து வந்த புராதன மதத்திற்குத் தனியாக ஒரு பெயர் இருந்ததாகத் தெரியவில்லை. சைவம், வைஷ்ணவம் என்ற பிரிவு கள் தோன்றாத காலம் அது. வடநாட்டு மதங்களின் தொடர்புகள் ஏதும் அன்று இல்லை.

இவர்களின் மத்தியில் கி.மு.500ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடநாட்டிலிருந்து பௌத்தம், ஜைனம், பிராமணியம் எனப்படும் வைதீக மதம், ஆசீவகம் ஆகியன தமிழ்நாட்டை வந்தடைந்தன. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட இம்மதங்கள் ஒன்றையொன்று இழித்துப் பழித்துப் பேசி அவற்றை அழித்துவிட முற்பட்டன.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்த பிறகு அவரது போதனைகளைப் பின்பற்றிய அவரது சீடர்கள் இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று அவரது மதக் கொள்கைகளைப் பரவச் செய்த காலத்தில் தமிழ்நாட்டிற்கும் வந்து பௌத்தமதக் கொள்கை களைப் போதித்தார்கள்.

புத்தர் பெருமான் உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே காஞ்சி நகருக்கு விஜயம் செய்தார் என்ற மரபுவழிக் கதைகளும் புராதன தமிழகத்தில் வழக்கிலிருந்தது. அதன் காரணமாகவும் பௌத்த தேரர்கள் ஆதரவு பெற்றார்கள்.

தமிழ்நாட்டில் இருந்த அரசர், வணிகர், செல்வந்தர் முதலானவர்களின் பொருளுதவி பெற்று விகாரைகளையும் பள்ளிகளையும் சேதியங்களையும் மடாலயங்களையும் பௌத்த குருமார்கள் ஆங் காங்கே நிறுவினார்கள். மடங்களில் வாழ்ந்த பௌத்த துறவிகள், மருத்துவம் பயின்று, தம்மிடம் வரும் பிணியாளர்களுக்கு இலவசமாக மருந்து கொடுத்துத் தொண்டு புரிந்தார்கள். மடால யங்களில் பாடசாலைகள் அமைத்து சிறுவர்களுக்கு கல்வி கற்பித்து வந்தார்கள். பண்டைய தமிழகத் தில் பாடசாலைகளை அமைத்து எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தவர்களில் முக்கியமானவர்கள் பௌத்த குருமார்களே.

பௌத்த மதத்துக்குரிய புனித நாட்களில் நாட்டு மக்களை தமது பள்ளிகளுக்கு அழைத்து மணல் பரப்பிய முற்றங்களில் அவர்களை அமரச் செய்து திரிபிடகம், பௌத்த ஜாதகக் கதைகள், புத்தரின் சரித்திரம் முதலான நூல்களை வாசித்து பொருள் சொல்லியும் மக்களுக்கு மத போதனை களையும் செய்து வந்தார்கள். மேலும் அறச் சாலைகளை நிறுவி, குருடர், செவிடர், முடவர் முதலானவர்களுக்கும், ஏழைகளுக்கும் உணவு வழங்கிய செய்திகளை மணிமேகலை கூறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்காலகட்டத்தில் வட இந்தியாவிலிருந்து தமிழகத்தில் புகுந்த பிராமணிய வைதீக மதம் போதித்த சாதிப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளாத தமிழர்கள் - பிறப்பினால் மேல்சாதி - கீழ்சாதியென்று எதுவும் இல்லையெனப் போதித்த பௌத்தமதத்தை இலகுவாக ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை.

தமிழ்நாட்டில் பௌத்த மதம் பெற்றிருந்த செல்வாக்கை சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், பெரியபுராணம், நீலகேசி முதலிய நூல்களால் அறிய முடிகின்றது.

## அசோகனின் அற வெற்றி

மகத நாட்டின் அசோகச் சக்கரவர்த்தி பௌத்தத்தின் மீது கொண்ட அதீத ஈடுபாட்டினால், இம்மதத்தை இந்திய நாட்டிலும் இந்தியாவுக்கு வெளியிலும் பரப்பும் பணியை மேற்கொண்டார்.

தமிழகத்தில் பௌத்தத்தைப் பரப்ப அசோக மன்னன் மேற்கொண்ட பணியை கி.மு.258 இல் எழுதப்பட்ட அசோகரது மூன்றாவது பாறைக் கல்வெட்டு (Rock Edict III) இவ்வாறு உரைக்கிறது. "தர்மவிஜயம் என்னும் அறவெற்றியே மாட்சி மிக்க மன்னரால் (அசோகர்) முதல்தரமான வெற்றியென்று கருதப்படுகின்றது. இந்த வெற்றி இந்த இராச்சியத்திலும் இதற்கப்பால் அறுநூறு யோசனை தூரத்திலுள்ள யவன தேசத்திலும் அதற்கும் அப்பால் தொல்மி, அண்டிகோணஸ், மகஸ், அலெக்சாந்தர் என்னும் பெயர்களாகக் கொண்ட நான்கு அரசர்களின் தேசங்களிலும், இப்பால் தெற்கே உள்ள சோழ, பாண்டிய தாம்பிரபரணி வரையிலும் இந்த அறவெற்றி அரசரால் கைப்பற்றப் பட்டது."

அசோகச் சக்கரவர்த்தி பல நாடுகளிலும் பௌத்த தர்மத்தை பரவச் செய்ததனால் பெற்ற வெற்றியை அவர் இந்நாடுகளை "அறவெற்றியால் கைப்பற்றி" பெற்ற வெற்றியென இச்சாசனம் உரைக்கிறது.

இச்சாசனத்தில் காணப்படும் 'தாம்பிரபரணி' என்ற பதம் இலங்கையைக் குறிப்பிடுவதாக சிங்கள அறிஞர்களும் தாமிரபரணி ஆற்றின் வடிநிலப் பகுதி களைக் குறிப்பதாக தமிழக அறிஞர்களும் பொருள் கொள்வர்.

## பாண்டிய நாணயங்கள்

தமிழகத்தின் ஆதி அரசு பாண்டிய அரசே. கி.மு.500ம் ஆண்டுக் காலத்திலேயே கொற்கைப் பாண்டிய மன்னர்கள் உலோக நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

புராதன பாண்டிய நாணயங்களை ஆராய்ந்த வேலூர் லூதரியன் மிஷனைச் சேர்ந்த அறிஞர் நாணயஇயல் வல்லுநரான வண. பிதா.லோவந்தால் (Rev. E.Loventhal) பின்வரும் தகவல்களைத் தருகி றார். (2) கி.மு.500ம் ஆண்டுக் காலத்தில் வெளி வந்த கொற்கைப் பாண்டிய நாணயங்களில் பாண்டியர்களின் அக்காலத்தைய அரச சின்னமான போர்க் கோடரி (Battle axe)பொறிக்கப்பட்டிருக்கிறது.

கி.மு.300ம் ஆண்டுக்கால கொற்கைப் பாண்டிய நாணயங்களில் பாண்டிய மன்னர்களின் அரச இலச்சனை யானையாக மாற்றப்பட்டிருக் கிறது. போர்க்கோடரியை யானையாக மாற்றியமை க்கு கொற்கைப்பாண்டிய மன்னர்கள் பௌத்த மதத்தைத் தழுவியதே காரணம் என்பது லோவந்தாலின் முடிபாகும். (3)

## பௌத்த சக்கரம்

இலங்கையில் பௌத்தமதம் பரவிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய யானைச் சின்னம் பதித்த புராதன நாணயங்கள் பௌத்த சக்கரங்கள் என அழைக்கப்படுகின்றன. இலங்கையின் பல பகுதிகளில் நடைபெற்ற அகழ்வுகளில் இந்தப் பௌத்த சக்கர நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இலங்கையின் புராதன நாணயங்களை ஆராய்ந்த பிரித்தானிய நாணய இயல் வல்லுநரான கொட்றிங்ரன் இந்த நாணயங்கள் பாண்டிய மன்னர் களின் வெளியீடுகளே என இனம்கண்டிருக்கிறார். (4)

1990ஆம் ஆண்டில் பிரித்தானிய அகழ்வா ராய்ச்சிக் குழுவினர் அநுராதபுரத்தில் நடாத்திய அகழ்வுகளில் கண்டெடுத்த பௌத்த சக்கர நாணயங்கள், பாண்டிய நாட்டு நாணயங்களே என மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார் கேம்பிரிஜ் பேராசிரியர் ஆல்சின். (5) ரேடியோ கார்பன் C14 தேதிக் கணிப்புக்களின்படி இந்த நாணயங்கள் கி.மு.300ஆம் ஆண்டு காலத்திற்கு உரியனவாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன.

பௌத்தசக்கர நாணயங்கள் திருநெல்வேலிப் பகுதிகளிலும், கொற்கையிலும், இலங்கையில் மாந்தை, கந்தரோடை, வல்லிபுரம், அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டது.

## ஒள்ளியூர் தந்த புத்தப்பாண்டியன்.

கி.பி.25ஆம் ஆண்டில் கொற்கைப் பாண்டியர் கள் மதுரை (கூடல்) மீது படையெடுத்து அங்கே இருந்து ஆட்சி புரிந்த சிற்றரசனான அகுதி என்ற அரசனை விரட்டிவிட்டு, புதியதொரு அரச வம்சா

www.tamilarangam.net



வளியை மதுரையில் ஆரம்பித்தார்கள். அதன் பின்னர் சில நூற்றாண்டுகளுக்குப் பாண்டிய அரச வம்சங்கள் ஒரே சமயத்தில் கொற்கையிலும் மதுரையிலும் அரசபீடமமைத்து ஆட்சி புரிந்தன.

முன்னர் கூடல் எனப் பெயர் கொண்டிருந்த இந்த நகரத்தின் பெயரை, கடல் கொண்ட தென் மதுரையின் நினைவாக மதுரை எனப் பாண்டியர்கள் மாற்றினார்கள். கூடல் நகரைக் கைப்பற்றிய பாண்டிய மன்னனின் பெயரை ஒள்ளியூர் தந்த புத்தப்பாண்டியன் என உரைக்கின்றார் சங்கப் பெரும்புலவர் பரணர்.

பௌத்த மதத்தைத் தழுவியிருந்த ஒள்ளியூர் தந்த புத்தப்பாண்டியன், மதுரைப் பாண்டிய வம்சத்தின் அரச சின்னமாக மீனைத் தேர்ந்தெடுத்தான். யானையைப் போன்று மீன் சின்னமும் பௌத்தமத சின்னமே என உறுதிப் படுத்துகின்றார் அறிஞர் லோவந்தால். (6)

அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களின் இன்றையகாலப் பதிப்புக்களில் ஒள்ளியூர் (ஒல்லையூர்) தந்த புத்தப்பாண்டியனின் பெயர் பூதப்பாண்டியன் என பதிப்பாசிரியர்களால் மாற்றப்பட்டு இருக்கிறது. நாம் பெருமைப்படும் திராவிடச் சின்னங்களான 'கொற்கை காத்த வீரவேழமும்', 'மதுரையிற் பறந்த மீன்கொடியும்' பௌத்த மதச் சின்னங்களே என்பதை அறியும் போது பண்டைத்தமிழர் நாகரீகத்தில் பௌத்தம் வகித்த உன்னதமான நிலையை இன்று நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

## பௌத்தம் தழுவிய சோழமன்னர்கள்

சோழநாட்டில் பௌத்தம் சிறப்பாகக் காஞ்சி, காவிரிப்பூம் பட்டினம், ஆகிய நகரங்களில் சிறப்புடன் திகழ்ந்திருந்தது என்பதை மணிமேகலை எடுத்துரைக்கின்றது. களர்கிள்ளி, இளங்கிள்ளி ஆகிய சோழ மன்னர்கள் பௌத்த மதத்தை ஆதரித்து காஞ்சி நகரில் பௌத்த சைத்தியங்களைக் கட்டுவித்தார்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. (7)

காஞ்சி மாநகரில் அறவண அடிகள் நடாத்திய பௌத்தப் பள்ளியிலே மாதவியும் மணிமேகலையும் பௌத்த தர்மத்தைப் பயின்று கொள்ளுகிறார்கள். இந்த அறவண அடிகளே நாகர்ஜுனா எனப் பிற்காலத்தில் புகழப்பெற்ற பௌத்த ஞானி என மேனாட்டு அறிஞர் அலெய்ன் டானியலு கருதுகிறார். (8)

## கியுன் சாங் (Hieun Tsang)

தமிழ்நாட்டுக்கு வருகை தந்த சீன யாத்திரீகரான கியுன் ஸாங் தமிழகத்தில் பௌத்தமதம் பற்றிய பல செய்திகளைத் தருகிறார். (9)

கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே கௌதம புத்தர் காஞ்சி நகருக்கு விஜயம் செய்ததாயும், அங்கே நடைபெற்ற வாதத்தில் தீர்த்தங்கார் என்ற வேதமதப் பிராமணரை தோல்வியடையச் செய்து, அவரைப் பௌத்தம் தழுவச் செய்தார் என்ற மரபுக்கதைகள் இருந்ததை எடுத்துச் சொல்கிறார்.

அசோக மன்னன் காலத்தில் காஞ்சிபுரத்தில் பௌத்தம் வெகுவாகப் பரவியிருந்தது என்பதையும், காஞ்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த விகாரைகள் இருப்பதாயும் அங்கே 300க்கும் மேற்பட்ட இலங்கைப் பௌத்த தேரர்கள் பயிற்சி பெறுவதாயும், கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மதுரையில் மகிந்தர் கட்டியதாக வழங்கப்படும் பௌத்த பள்ளி ஒன்று இருப்பதையும் கியுன் ஸாங் தெரிவிக்கிறார். □□□□□□□□□□□□□□□□□□□□□□□

## (Notes) அடிக்குறிப்புகள்:

(1) சிவன் அல்லது சிவந்தன் (Sun God): சமஸ்கிருதத்தில் ருத்திரன் (Red God), பார்வதி—பாரின் தேவி (Earth Goddess), விண்ணு—விண்ணகக் கடவுள் (Sky God): சமஸ்கிருதத்தில் விஷ்ணு, குறிஞ்சிக்கடவுள்— குமரன்: பிற்கால ஸ்கந்தன், கந்தன், புராதன திராவிடர்கள் மேற்கொண்டிருந்த இயற்கை வழிபாட்டிலிருந்தே அவர்களது தெய்வங்கள் தோன்றியிருப்பதற்கு, அத்தெய்வங்களின் பெயர்களே ஆதாரமாகின்றன.


(2) Loventhal, Rev. E. Coins of Tinnevelly, Madras 1888, Repr.1938


(3) துடித லோகத்தில் எழுந்தருளியிருந்த அவலோகிதர் எனப்படும் போதிசத்வர், புத்தராக மாயாதேவியின் திருவயிற்றில் வந்து அமர்ந்தபோது வெள்ளை யானைக் கன்று உருவமாக வந்தார் என்று பௌத்த நூல்கள் உரைக்கின்றன.


(4) Codrington, H.W. Ceylon coins and Currency, Colombo 1924.

(5) Allchin, F.R. The Archeology of early historic south Asia, Cambridge 1995.

(6) Loventhal. Rev. E. ibid

(7) மணிமேகலை. உ.வே.சாமிநாதையர் பதிப்பு

(8) Alain Danielou: Introduction to Manimekhalai, New York 1959.

(9) மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. தமிழ்நாட்டில் பௌத்தம் : உலக நாகரீகத்தில் தமிழரின் பங்கு, சென்னை 1982.பக்.76—81.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதாசிரியர் தனது நண்பருக்கு நிகழ்ந்த உண்மைச் சம்பவத்தை பெயர் மாற்றங்களுடன் சிறுகதை வடிவில் எழுதி உள்ளார். இச்சிறுகதையின் முதற்பகுதி தேசம் இதழ் 13ல் வெளிவந்தது. இரண்டாவது பகுதியுடன் இச்சிறுகதை முற்றுப் பெறுகிறது.

முதற்பகுதியில் வாழ்க்கைச் சுமையுடன் கடன் சுமையையும் சுமந்து கொண்டு செல்லும் சண்முகம் என்ற சுவிற்ஸர்லாந்திற்குப் புலம்பெயர்ந்த இளைஞனை ஆண்டவரின் தூதராக தன்னை அறிமுகப்படுத்திய ஒருவர் புகையிரத நிலையமொன்றில் சந்திக்கிறார். சண்முகம் அவரின் பேச்சில் அறுதல் அடைந்து அவரை வீட்டுக்கு வரவழைக்கிறான். வீட்டுக்கு வந்த அந்த தேவ தூதர் சண்முகத்துடன் என்ன உரையாடினார். சண்முகம் என்ன ஆனான். வாசியுங்கள். இது கதையல்ல நிஜம்.

அருணின்

# வைரசு மனிதர்கள்



ஓவிய உதவி
இலக்கியக்குரிசல்,
மலேசியா

"அது சரி தம்பி. உமது பிரச்சினைகள் இப்போ எப்படி? ஆண்டவரிடம் உமக்காக நான் மன்றாடினேன். இனி உமக்கு ஆண்டவர் அருளால் நடக்கப்போகும் அதிசயங்களைக் கண்டு நீர் ஆச்சரியப்படப் போகிறீர். கவலைப்படாதையும் தம்பி, இஞ்ச பாரும், இந்த உலகத்தில எங்க பார்த்தாலும் பசியும் பட்டினியும், யுத்தமும் அழிவும் தான். இவற்றைப் போக்கி மானிடத்தை இதிலிருந்து மீட்க மீட்பராக ஆண்டவர் வரப் போகிறார். இந்த உலகத்தின் பாவங்களைத் தான் சுமந்து கொண்டு, பூமிக்கு நன்மைகளையும் இரட்சிப்பையும் குடுக்கப்போகிறார். மக்கள் படுகின்ற வேதனைகளுக்கு ஒரு முடிவாக ஆண்டவர் பூமிக்கு வருவார். ஆண்டவர் வருவார். பூமிக்கு அவர் நிச்சயம் வருவார்."

மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அந்த மனிதர் சண்முகத்துக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். மகுடியின் ஆட்டத்துக்கு அசையும் நாகம் போல சணமுகம் கட்டுண்டு கிடந்தான்.

அன்று முதல் பூமிக்கு ஆண்டவர் வரும் செய்தியைத் தாங்கி வரும் தூதராக அவர் அடிக்கடி சண்முகத்திடம் வந்து போனார்.

இப்போது சண்முகம் அதிகம் மாறித்தான் விட்டான். அதாவது அந்த 'பிரீப்கேஸ்' தேவதூதரின் வாக்கு அவனை படிப்படியாக இந்த லௌகீக யதார்த்த உலகிலிருந்து படிப்படியாக மீட்டுக் கொண்டிருந்ததை அவன் உணர்ந்து கொண்டான். தாய், சகோதரங்கள், உறவுகள், தான் கொடுக்குமதியான கடன் சுமை எல்லாம் இப்போது அவனது மனதில் சுமைகளாகப் படுவதில்லை. ஆண்டவரின் பிரதிநிதியின் வார்த்தைகள் தான் அந்த வீடுதலை கீதம் தான் அவனை இப்பொழுது படிப்படியாக ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது.

அன்றாடம் அவன் நித்திரையிலிருந்து விழித்ததும் கண் முழிக்கவென்று நான்கு வருடங்களுக்கு முன் தாய் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்த ஊர்க் கோடித் துர்க்கை அம்மனின் புகைப்படம், ஊரிலிருந்து வரும் போது கொண்டு வந்திருந்த மெய்கண்டான் கடண்டரில் இருந்த பிள்ளையார் படம் எல்லாம் இப்பொழுது சாத்தான்களாக மாறி அவனை அச்சுறுத்தியதால் அவை கடந்த வாரம் குப்பைப்பையில் போடப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு விட்டன.

www.tamilarangam.net




## Langorf Hotel & Apartments

20 Frognal, Hampstead, London, NW3 6AG

***DO YOU NEED ACCOMODATION IN LONDON ?***

Tastefully Furnished Hotel Bedrooms,

Self Catering Apartments or Flats Suitable for Families or Individuals.

Ten Minutes Away From Oxford Street.

We are pleased to offer 25% discount to any "Thesam" readers wanting accommodation in London.

Tel : 0207 794 4483
E -mail : info@langorfhotel.com

Fax : 0207 435 9055
Web : www.langorfhotel.com

தமிழில் தொடர்புகளுக்கு : 07919 444 994



## கவலைகளை களைந்தெறியுங்கள்

# IMMIGRATION

அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் - மேன்முறையீடுகள்,
நாடு கடத்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்,
மனித உரிமை விண்ணப்பங்கள்,
அனைத்து விண்ணப்பங்களுக்கும்

**நீண்டகால அனுபவமும் அண்மைக் காலத்தில் கூடுதல் மேன்முறையீட்டு வழக்குகளில் வெற்றி பெற்ற எமது இயக்குனர் திரு குலேந்திரனை அணுகுங்கள்.**

## Interanational Refugees Organisation

1083 Garratt Lane
London
SW17 OLN (Tooting Broadway - 2mins from tube)

Tel: 020 8682 4494
020 8682 9480
Mobile : 079 6107 1875
Fax: 020 8682 9922




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இரு வாரங்களுக்கு முன்னர் தமக்கை அனுப்பி வைத்த பிரசாதத் திருநீறு, சாத்தான்களின் முகப்பவுடராக ஒருநாள் அவனைப்பார்த்து நகைத்ததால் அதுவும் ஜன்னல்வழியே எறியப்பட்டு சுவிஸ் நகர வீதிகளில் காற்றினால் காவிச்செல்லப்பட்டு விட்டது. இப்பொழுது அவனை வீதியில் வித்தியாசமாகப் பார்க்கும் எவரும் அவனுக்கு சாத்தான்களாகத் தென்பட ஆரம்பித்து விட்டார்கள். தன்னைப் பரிதாபத்துடன் உற்றுப்பார்ப்பவர்களிடமிருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்ளவென்று ஒதுங்கி வாழத் தன்னைக் காலக்கிரமத்தில் தயார்ப்படுத்திக் கொண்டான். ஜன்னல் திரைகள் கூட நீக்கப்படுவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருட்டு அவனுக்கு பாதுகாப்பளிப்பது போலிருந்தது.

காலப்போக்கில் இடி இடித்தாலும் மின்னினாலும் அது சாத்தானின் அறை கூவலாகப்பட்டது. தேவனின் வருகையை எதிர்க்கும் சாத்தானை அவன் முற்றிலுமாக வெறுத்தான். சண்முகத்தின் மனதில் சாத்தான் எதிர்ப்பைத் தவிர்ந்த வேறு எந்த விடயமும் படிவதாகத் தெரியவில்லை. அதற்கு இடம் இல்லையோ என்ற அளவுக்கு மனதில் அந்த மனிதரின் வேத வசனங்கள் நீக்கமற இடம்பிடித்துக் கொண்டிருந்தன.

தன்னைச் சுத்தப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு சேற்றை வாரிப்பூசிக் கொள்ளும் நிலையில் அவன் இன்று இருந்தான். பக்குவப்படாத மனங்களில் இந்த வைரசு மனிதர்களால் மதங்கள் திணிக்கப்பட்டால் உண்டாகும் பலாபலன்களை உணரும் திறமை அவனிடம் இருக்கவில்லை. அவன் தன்நிலை மறந்தவனாக என்றுமே காணமுடியாத ஆண்டவரை நம்பி, சாத்தானை மனதில் நினைத்து நினைத்துப் பயந்துகொண்டிருந்தான்.

பல தடவைகள் நித்திரையில் சாத்தான் தன்னை நெருங்கிக் கழுத்தை நெரிப்பது போலக் கனவு கண்டு இரவின் தனிமையில் புலம்பியிருக்கிறான். சிலவேளைகளில் பக்திப்பரவசம் கொண்டு பாடி ஆடுவான். தன்னிடம் சேட்டை புரிய வரும் சாத்தானிடமிருந்து தப்பிக்கத் தன்னை ஆண்டவனிடம் மிக

www.tamilarangam.net



நெருங்கியவனாகக் காண்பிக்கும் பாசாங்குகளைச் செய்ய ஆரம்பித்து விடுவதும் இப்பொழுது அன்றாடமாகி விட்டது.

சண்முகத்துக்குத் தன் தொழிலில் இதுவரை இருந்த அக்கறை படிப்படியாகக் குறைந்து விட்டது. நல்ல உணவு, ஆழமான தூக்கம் இவை இல்லாத நிலையில் அவனது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டதை அவனால் உணர்ந்து கொள்ள இயலவில்லை. உணர்ந்தாலும் அதற்கு சாத்தான் தான் காரணமாகியிருந்திருப்பான்.

அவனது நடத்தையில் அதிருப்தி கொண்ட முதலாளி அவனுக்கு விரைவிலேயே 'குறிண்டிக்குங்' அறிவிப்புக் கடிதத்தை பதிவுத்தபாலில் அனுப்பி விட்டது கூட அவனுக்கு இப்போது ஒருபொருட்டாகத் தெரியவில்லை. அது சாத்தானின் வேலை. அந்த முதலாளி சாத்தானிடம் சரணாகதியடைந்து விட்டார் என்று கருதிவிட்டான். தன்னை சாத்தானின் சேவகனாகக் காட்டிக்கொள்ளும் முதலாளியிடம் அவனால் எப்படித் தான் தொடர்ந்து வேலை செய்ய இயலும்?

அவனுக்குக் கடன் கொடுத்த காந்தன், சண்முகத்துக்கு விசர் பிடித்து விட்டது என்ற தீர்மானத்தில் இப்பொழுது அவனிடம் கடன் அறவிடச் செல்வதில்லை. அது அவனைப் பொறுத்த வரையில் அறவிடமுடியாக்கடனாகி விட்டது. தங்கையின் நிச்சயதார்த்தத்துக்காக அவன் இன்னொரு மேலதிக வேலையை இனித் தேட வேண்டும்.

மோகனின் சீட்டு சண்முகத்தின் மனநிலைக் கோளாறால் கொஞ்சம் தடுமாறினாலும் இடையில் சரிக்கட்டி விட்டான். சண்முகம் இனி சீட்டுப்பங்கை கேட்க வரப் போவதில்லை என்ற நம்பிக்கை அவனுக்கு.

சண்முகத்துக்கு இப்பொழுது ஒரே கவலை என்னவென்றால், ஆண்டவரே ஆண்டவரே என்று எத்தனை முறை வருந்தி அழைத்தாலும் காட்சியளிக்காமல் இருக்கிறார். சாத்தானோ அழையா விருந்தாளியாக இரவிலும் பகலிலும் நீக்கமற நிறைந்திருந்து அசையும் பொருட்களிலெல்லாம் நின்று தன்னை இனம்காட்டிக் கொண்டிருக்கின்றான்.

தனது இயலாமையை வெளிப்படுத்த இப்பொழுது ஆண்டவரை நோக்கிய பிரார்த்தனையை ஓயாமல் செய்கிறான். அவனது பிரார்த்தனை அயலிலுள்ளவர்களுக்கு நாராசமாக ஒலித்திருக்க வேண்டும். ஒரு நாள் காலை வீட்டு அழைப்புமணி ஓசை கேட்டு ஆண்டவர் தான் வந்திருக்கிறாரோ என்றெண்ணிக் கதவைத்திறந்த சண்முகத்தின் முன்னால் 2 பொலிஸ்காரரும் சில சமூக சேவை அதிகாரிகளும்.

இப்பொழுது சண்முகம், சுவிட்சர்லாந்தின் நீண்டகால மனநோயாளர் பிரிவில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கின்றான். தங்களது கடிதத்துக்குப் பதிலையோ சண்முகத்தின் பணத்தையோ காணாத சோகத்தில் அவனது தற்காலிக இருப்பிடத்தைக் கண்டறியும் பணியில் ஈடுபட அவனது தாய் சகோதரங்கள் தயாராகிறார்கள்.

சண்முகத்தின் ஆழமான தூக்கத்தில் அவனது அம்மா, அப்பா, தங்கை வசுந்தரா, பக்கத்து வீட்டு சுப்பையாக் கிழவன். தபால்காரன் மணிவண்ணன், தன்னை சுவிஸ் நகர் வரை கொண்டுவந்து சேர்த்த ஏஜன்சிக்காரன் சதன், எல்லாம் அடிக்கடி வந்து போகின்றனர். இடையிடையே கறுப்பு பிரீப்கேசுடன் அந்த மனிதர் வந்து அவன் மனதில் செபம் வேறு செய்கிறார்.

"அன்பான எமது ஆண்டவரே!
விடுதலை விரும்பிய மனிதப்புறாக்கள் மதமாற்றிகளின் மாய வலைக்குள் விழுந்து சிக்கித் தவிக்கின்றார்கள். சண்முகத்தைப் போன்ற அப்பாவிகளை இந்நோயின் பிடியிலிருந்து மீண்டு, சுகம்பெற்று மீண்டும் மனிதர்களாக வாழவைக்க நீர் எங்கிருந்தாலும் ஒருதடவை வந்துவிட்டுப் போவீராக மீட்பரே உம்மைத் தொழுகிறேன். ஆமென்."

அதோ தொலைவில் அந்த பஸ்தரிப்பில் நாகரீகமான உடையுடன் கையில் ஒரு பிரீப் கேஸுடன், அந்தத் தமிழ் இளைஞனுடன் மிகுந்த கரிசனையுடன் குசலம் விசாரித்துக்கொண்டு.. அவரை இனம் காண முடிகிறதா? □□□□□□□□□

www.tamilarangam.net

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# ஈழத்து சிறுசஞ்சிகைகளின்
# ஆவணமாக்கல் முயற்சி

கடந்த காலங்களில் ஈழத்தில் வெளிவந்த நின்றுபோன ஈழத்து சிறு சஞ்சிகைகள் பற்றிய விபரங்களை கொழும்புத் தமிழ்ச் சங்கம் தொகுக்க ஆரம்பித்துள்ளது.

**தேவையான விபரங்கள்:**

சிற்றிதழின் பெயர்,
வெளிவந்த காலம்,
வெளியீட்டாளர் விபரம்,
வெளியிடப்பட்ட பிரதேசம்,
இதழின் ஆசிரியர்,
வெளிவந்த இதழ்கள்,
எப்போது நிறுத்தப்பட்டது,
நின்று போன காரணம்,
எழுதிய எழுத்தாளர்கள்,
வெளிவந்த ஆக்கங்கள்,
இதழின் அளவு,
இதழின் பக்கங்கள்.

அவ்விதழ்கள் பற்றிய விபரம் மற்றும் ஈழத்து இலக்கிய உலகில் அவ்விதழ்கள் ஏற்படுத்திய தாக்கங்கள், பங்களிப்புக்கள், முதலிய விபரங்களை உள்ளடக்கியதான கட்டுரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் தாயகத்தில் இருக்கும் எழுத்தாளர்களிடம் இருந்தும், புகலிட எழுத்தாளர்களிடம் இருந்தும் கோருகின்றனர். கொழும்புத் தமிழ்ச்சங்கம் வெளியிடும் ஓலை இதழ்களில் இக்கட்டுரைகள் தொடர்ந்து பிரசுரிக்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் உங்களுக்குத் தெரிந்த சிற்றிதழ்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பினால் இந்த ஆவணப்படுத்தும் முயற்சிபெருமளவில் வெற்றியளிக்கும். அதே வேளையில் இச்சிற்றிதழ்களின் பழைய பிரதிகள் முழுமையாக கைவசம் இருந்தால் அவற்றை விலைகொடுத்து வாங்கவும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தயாராக உள்ளதாக ஒரு தொடர்பில் அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்கள். புகலிடத் தமிழ் சிற்றிதழ்களை வெளியிட்டவர்களும் அவற்றை சேகரித்து வைத்திருப்பவர்களும் இந்த ஆவணச் சேர்க்கை முயற்சிக்கு உதவி செய்யலாம்.

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality
Employment
Landlord & Tenant
Housing
Welfare Benefits
Matrimonial

**Tel : 020 8478 5797**
**Fax: 020 8478 4486**

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

www.tamilarangam.net

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார விடயங்களைத் தாங்கி வரும்

# தேசம்



சமாதான முயற்சியும் மனித உரிமைகளும் என்ற தலைப்பில் யூன் 28,29ல் இடம் பெற்ற கருத்தரங்கில் பி ஏ காதர் (இடது) உரை யாற்றுகிறார். நடுவே காலை அமர்விற்கு தலைமை வகித்த ரி சோதிலிங்கம். வலதுபுறம் பெல்ஜியத் தைச் சேர்ந்த சர்வதேச அரசியல் சட்ட நிபுணர் கிரிஸ்ரின கமகே.



அண்மையில் இலண்டன் வந்திருந்த ஆனந்த விகடனின் முன்னாள் துணை ஆசிரியர் ஜே எம் சார்லி தேசம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மக்களுக்காகத் தான் இலக்கியம் என்றும் சஞ்சிகைகள் குறுகிய வட்டத்திற்குள் தீண்டாமையை கடைப் பிடிப்பது ஆகாது என்றும் தெரிவித்தார்.
படம்: சார்லி - மோகன்



3. ஈழவர் திரைக்கலை மன்றம் விரைவில் திரையிட உள்ள ஏகலைவன் திரை நாட்டுக் கூத்தில் ஒரு காட்சி. பரிஸில் ஈழவர் திரைக் கலை மன்றமும் திருமறைக் கலா மன்றமும் - ஏகலைவன் - நாட்டுக் கூத்தை படமாக்குகின்றனர்.